ஜூன் 2026
மலர் 24, இதழ் 9


# சத்திய வார்த்தை

IBT நிறுவனர் (Late) Rev. Prof. S. பன்னீர் செல்வம்

SATHTHIYA VAARTHAI - TAMIL
இந்திய வேதாகம மொழிபெயர்ப்பாளர்களின் செய்தி மலர்

ஆண்டு சந்தா
ரூ. 100/-

# ஆண்டவரிடம் போய் சொல்லுங்கள்



# ஆண்டவரிடம் போய் சொல்லுங்கள்

யோவான்ஸ்நானகனுடைய உடலை அவருடைய சீஷர்கள் அடக்கம் பண்ணின பின்பு, அந்த செய்தியை இயேசுவிடம் போய் சொன்னார்கள் (மத். 14 : 12).

“இயேசுவிடம் போய் சொன்னார்கள்” – என்ன அருமையான ஆலோசனை! என்ன ஆறுதலான வார்த்தைகள்!

சிறுபிள்ளைகள் ஒருவருக்கொருவர் சண்டை போட்டுக் கொண்டால் அல்லது தெருவில் விளையாடும் போது யாராவது அடித்து விட்டால், ‘‘எங்க அப்பாவிடம் போய் சொல்லிவிடுவேன்’’ என்று பிள்ளைகள் சொல்வதை நாம் அடிக்கடி கேட்டிருக்கிறோம். அந்த சிறு பிள்ளைகளுக்கு அப்பாதான் சுப்ரீம் கோர்ட். அப்பாவிடம் சொல்லி விட்டால் போதும், அப்பா எல்லாவற்றையும் கவனித்துக் கொள்வார். எல்லாவற்றையும் சரி செய்து விடுவார் – என்றதொரு பெரிய நம்பிக்கை சிறு பிள்ளைகளிடத்தில் இருக்கிறது. அப்பாவிடம் போய் சொல்ல வேண்டும் – என்ற ஏக்கம் பிள்ளைகளின் உள்ளத்தில் இயற்கையாகவே இருக்கிறது.

நாம் பெரியவர்களாக மாறினாலும் ஆண்டவரைப் பொறுத்த வரையில் அவருக்கு நாம் இன்னும் பிள்ளைகள் தானே – ‘‘டெல்லிக்கு ராஜாவானாலும் எனக்கு நீ பிள்ளைதானே” – என்ற பழமொழி என் நினைவிற்கு வருகிறது. ஆம்! நமக்கு எத்தனை வயதானாலும், எவ்வளவுதான் பெரிய மனிதர்களாக மாறினாலும், நாம் ஆண்டவருக்கு பிள்ளைகள் தான். நமக்கு என்ன கஷ்டம் வந்தாலும், நெருக்கம் வந்தாலும், குறைகள் ஏற்பட்டாலும், தோல்வி வந்தாலும் நமது அப்பாவாகிய ஆண்டவரிடம் போய் சொல்வது நல்லது. ஒருமுறை பேதுரு இயேசுவைப் பார்த்து, “நித்திய ஜீவவசனங்கள் உம்மிடத்தில் இருக்கும் போது, நாங்கள் வேறு யாரிடத்திற்கு போவோம்’’ என்று சொன்னது (யோவான் 6 : 68) இங்கு குறிப்பிடத்தக்கது. நமது வாழ்க்கையில் நமக்கு ஒவ்வொரு நாளும் ஏதாவது ஒரு பிரச்சனை வரத்தான் செய்யும். அப்படிப்பட்ட சமயத்தில் நமது பிரச்சனையையும், பாரத்தையும் யாரிடத்திலாவது போய் சொல்லணும் போல இருக்கும். எல்லோரிடத்திலும் போய் நமது பிரச்சனையை சொல்ல முடியாது; சொல்லவும் கூடாது. யாரிடத்தில் நமக்கு முழு நம்பிக்கையிருக்கிறதோ, யார் நம் மனதை, நம் மனபாரத்தை நன்கு புரிந்து கொள்வார்களோ, அப்படிப்பட்டவர்களிடத்தில் தான் நாம் போய் நமது பாரத்தை பகிர்ந்து கொள்வோம். நிச்சயமாக நமது ஆண்டவரிடத்தில் நாம் போய் நமது பிரச்சனைகளைப் பகிர்ந்து கொள்வதுதான் சாலச் சிறந்தது.

இந்த உலகத்தில் வாழும் எந்த மனிதனும் தனது வாழ்க்கையில் ஏதாவது ஒரு கட்டத்தில் “கடவுளே எனக்கு உதவி செய்யும்” என்று கெஞ்ச வேண்டிய கட்டாயம் ஏற்படுகிறது. ஒரு பிரசித்தி பெற்ற நாஸ்திகரைப் பற்றி நான் கேள்விப்பட்டிருக்கிறேன். கடவுளை நம்புகிறவன் முட்டாள் என்று பேசிய அவர், கடவுளை நம்பாத அவர் ஒரு நாள் நிறைய கஷ்டங்கள் வந்து அவரை நெருக்கிய போது, “ஐயோ கடவுளே” என்று தன்னை அறியாமலேயே கடவுளை நோக்கி கதறினாராம்.

நமது பூலோக வாழ்க்கையில் கஷ்டங்கள், துன்பங்கள், இடுக்கண்கள் மாறி, மாறி இரவு – பகல் போல வரத்தான் செய்யும். இதை யாராலும், எந்த சக்தியினாலும் தடுக்க முடியாது. சொல்லப்போனால், அப்படி வருவது ஆண்டவரது திட்டம். இயற்கையின் நியதி. இதுபற்றி ஒருவர் கருத்து தெரிவிக்கும் போது, இப்படியாக அவர் எழுதினாராம், ‘‘உங்களது வாழ்க்கையில் எதை உங்களால் மாற்ற முடியுமோ, அதை மாற்ற முயலுங்கள்: உங்களால் மாற்ற முடியாததை அது இருக்கிற பிரகாரமாக அதை முழு மனதார ஏற்றுக் கொள்ள உங்களது மனதை பக்குவப்படுத்திக் கொள்ளுங்கள். அது மாத்திரமல்ல, மேலே கொடுக்கப்பட்டுள்ள இந்த இரண்டு அணுகு முறையிலும் மறைந்திருக்கிற வித்தியாசத்தையும், தத்துவத்தையும் புரிந்து கொள்கிற மனப்பக்குவத்தையும் நீங்கள் பெற்றுக் கொள்வது நல்லது”.

நமக்கு என்ன செய்வது என்று புரியாத ஒரு குழப்பமான சூழ்நிலையில் நாம் ஆண்டவரிடத்தில் சென்று, அவரிடம் முறையிடுவது நல்லது. நமது எல்லாப் பிரச்சனைகளையும் ஆண்டவரிடத்தில் போய் சொல்லுவது, மன ரீதியாக ஒரு நல்ல ஆரோக்கியமான பழக்கம்.

கீழே கொடுக்கப்பட்டிருக்கிற மனிதர்கள் தங்களது வாழ்க்கையில் கஷ்டம் வந்தபோது,

தங்களது கஷ்டத்தை ஆண்டவரித்தில் போய் சொன்னார்கள் என்று வேதத்தில் வாசிக்கிறோம். அப்படிப்பட்ட மனிதர்களில் நாமும் ஒருவராக இருக்கலாம். நாமும் நமது கஷ்டங்களை, பிரச்சனைகளை இயேசுவிடம் போய் சொல்ல இங்கு அழைக்கப்படுகிறோம்.

1. யோவான் ஸ்நானகன் சிரச்சேதம் செய்யப்பட்ட போது அவரது சீஷர்கள் இயேசுவிடம் போய் அதைச் சொன்னார்கள் (மத். 14 : 12).

2. திருமணத்தில் குறைவு ஏற்பட்டபோது மரியாள் இயேசுவிடம் சென்று, "அவர்களுக்கு திராட்சரசம் இல்லை, எப்படியாவது அவர்களுக்கு உதவி செய்யும்" என்று சொன்னாள் (யோ. 2 : 3).

3. குருடர்கள் இயேசுவிடம் சென்று, ''எங்கள் கண்களைத் திறக்க வேண்டும்'' என்று முறையிட்டார்கள் (மத். 20 : 30-34).

4. ஆயி பட்டணத்தின் தோல்விக்குப் பின்பு யோசுவா தன் வஸ்திரங்களைக் கிழித்துக் கொண்டு, கர்த்தருடைய உடன்படிக்கை பெட்டிக்கு முன்பாக முகங்குப்புற விழுந்து ''நான் இனி மேல் என்ன செய்வது?'' என்று ஆண்டவரிடம்கேட்டான் (யோசுவா 7 : 6-8).

5. எசேக்கியா ராஜா எதிரிகள் படையெடுப்பின் நிமித்தம் பயந்து போய், ஆண்டவரை அவரது ஆலயத்தில் தேடினான் (ஏசா. 37 : 1).

**1(a) துக்ககரமான சம்பவம் நிகழும்போது**

**சிரச்சேதம் செய்யப்பட்ட யோவான் ஸ்நானகனுடைய உடலை அவனது சீஷர்கள் அடக்கம் பண்ணிய பின்பு, போய் அந்த செய்தியை இயேசுவுக்கு அறிவித்தார்கள் (மத். 14 : 12).**

மரணம் கொடியது. ஒரு குடும்பத்தில் யாராவது மரித்தால், அது பயங்கரமான பின் விளைவுகளை ஏற்படுத்த முடியும். ஒரு வயதான தாய், தனது வீட்டில் அதிகாலையில் யாரோ ஒருவர் கதவை தட்டும் சத்தம் கேட்டு கதவைத் திறந்த போது, ஒரு போலீஸ் ஆபீஸர் நின்று கொண்டிருந்தார். அந்த தாயின் ஒரே மகன் ஒரு விமான விபத்தில் தனது இரண்டு சிறு குழந்தைகளை விட்டு விட்டு இறந்து போன துக்கமான செய்தியைக் கூறினார்கள். தனது ஒரே மகன் - விபத்தில் மாண்டு போன செய்தியைக் கேட்ட அந்த தாய்க்கு உலகமே இருண்டு விட்டது. ஆனாலும், அந்தத் தாய் கிறிஸ்துவின் மேல் வைத்திருந்த விசுவாசத்தின் நிமித்தம் தைரியம் அடைந்தார்கள்.

யோவான்ஸ்நானகன் சிரச்சேதம் செய்யப்பட்டார். இயேசுவின் சீஷர்களில் பெரும்பாலோர் யோவான்ஸ்நானகனுடைய சீஷர்களாக இருந்தவர்கள் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. இயேசுவின் மரணம் எவ்வாறு அவரது சீஷர்களை நிலைகுலையச் செய்ததோ, அதே போல் யோவான்ஸ்நானகனின் மரணமும் அவரைப் பின்பற்றி வந்த நூற்றுக்கணக்கான சீஷர்களை நிலை குலையச் செய்தது. யோவானின் ஊழியம் ஏறக்குறைய ஒரு முடிவிற்கு வந்து விட்டது. "நான் சிறுகவும் அவர் (இயேசு) பெருகவும்" - என்று யோவான் சொன்ன வார்த்தைகள் அப்படியே நிறைவேறிக் கொண்டிருந்தன.

யோவானின் சிரச்சேதத்திற்கு வழி வகுத்த சம்பவங்கள் மிக துரதிர்ஷ்டமானது. ஒரு சாதாரண பிறந்த நாள் சம்பவம் யோவானின் மரணத்திற்கு வழி வகுத்தது என்றால் அதை விதி என்று சொல்வதா அல்லது சதி என்று சொல்வதா அல்லது சதியினால் ஏற்பட்ட விதியா - என்று புரியவில்லை.

**1(b) முதல் உலக மகா யுத்தம்**

உலகத்தில் நடந்த பல சரித்திர சம்பவங்களை நீங்கள் வாசித்தால் அது தற்செயலாக நடந்த சம்பவமாகத்தான் தோன்றும். ஜூன் 28, 1914-ஆம் ஆண்டு கவ்ரிலோ பிரின்சிப்பு (Cavrilo Princip) என்ற அரக்கன் செர்பியா நாட்டின் சரஜேவோ (Sarajavo) என்ற நகரத்தின் மக்கள் கூட்டத்தின் நடுவில் நின்று கொண்டு, சுற்றுப் பயணமாக வந்திருந்த ஆஸ்ட்டிரியா நாட்டின் இளவரசன் ஆர்ச்டியூக் ப்ரான்சில் பெர்ட்டினன்ட்டை துப்பாக்கியால் சுட்டுக் கொன்ற போது முதலாம் உலகப்போர் வெடித்தது. அதன் விளைவாக 2 கோடி மக்கள் கொல்லப்பட்டார்கள். ஒரு தனிப்பட்ட மனிதனின் உயிரோடு எத்தனை கோடி உயிர்கள் பின்னி பிணைக்கப்பட்டிருந்தன. ஒருவரது மரணம் நம் அனைவரையும் பாதிக்கிறது. 1984-ஆம் ஆண்டு முன்னால் பாரதப் பிரதமர் இந்திரா காந்தி கொலை செய்யப்பட்ட போது, ஆயிரக்கணக்கான உயிர்கள் பலியான கோர சம்பவத்தை நம்மால் மறக்க முடியாது.

**1(c) திட்டமிடப்பட்ட கொலை**

யோவான்ஸ்நானகன் சிரச்சேதம் செய்யப்பட்டது ஒரு சிறு பிள்ளைத்தனம். வடிகட்டின

முட்டாள் தனம். ஒரு 12 வயது சிறுபிள்ளை நடனத்திற்கு ஒரு பரிசு வழங்க வேண்டும். “எதைக் கேட்டாலும் நான் தருகிறேன்” என்று ராஜா சொல்ல அச்சிறுமி எனக்கு யோவானின் தலை வேண்டும் என்று அவள் சொல்ல, அதன் விளைவு – யோவான் சிரச்சேதம் செய்யப்படுகிறான். நீ என்னை அடிப்பது போல் அடி; நான் அழுவது போல் அழுகிறேன் – என்று யாரோ நாடகம் ஆடுவது போல்தான் இந்த நடனமும், நாடகமும் இருக்கிறது.

தான் கொடுத்த வாக்கைக் காப்பாற்றுவதற்காக ஏரோது ராஜா, யோவான்ஸ்நானகனின் சிரச்சேதத்தைக் கட்டளையிட்டதாக அவர் கூறுகிறார். யோவான் தலையைக் கேட்ட அந்த சிறுமி, ஏரோது ராஜாவின் தலையையே கேட்டிருப்பாளானால், தனது தலையை சிரச்சேதம் செய்ய சம்மதித்திருப்பாரா? நிச்சயமாக இல்லை. கொடுத்த வாக்கை நிறைவேற்றுவது நல்லதுதான். ஆனால், அந்த வாக்கை நிறைவேற்றுவதில் ஒரு சதி அடங்கியிருக்கிறது என்ற உண்மையை அறிந்த பின்பு, அந்த வாக்கை நிறைவேற்றுவது அவசியமில்லை என்பதை நாம் உணர வேண்டும். உன் சகோதரன் மனைவியை நீ வைத்திருப்பது தவறு – என்று யோவான் சொன்னதற்காக (மத். 14 : 4) யோவான் இந்த கிரயத்தை செலுத்தினார் – என்பதுதான் நிஜஸ்தமான உண்மை.

ஒரு வேளை இதை வாசிக்கும் உங்களது வாழ்க்கையில் கூட இப்படிப்பட்ட அநியாயமான மரணங்கள் நடந்திருக்கலாம். நீங்கள் நேசிக்கிற ஒருவர் ஏரோதியாளைப் போன்ற சிலர் செய்த சதியினால் உயிர் இழந்திருக்கக் கூடும். இக்கோர சம்பவம் உங்களையும் உங்கள் குடும்பத்தையும் நிலை குலையச் செய்திருக்கக் கூடும். இந்த உலகம் பல அநீதிகளைச் சந்தித்திருக்கிறது. தாவீதிற்கு உணவு கொடுத்து உதவினான் என்ற ஒரே காரணத்திற்காக சவுல் ராஜா அகிமெலேக்கு என்ற ஆசாரியனையும் அவனோடு இருந்த 85 பேர்களையும் அநியாயமாகக் கொன்று போட்டான் (1 சாமு. 22 : 16–18). வேலியே பயிரை மேய்ந்தால் பாவம், பயிர் என்ன செய்ய முடியும்.

இதை வாசிக்கிற உங்களுடைய உள்ளத்தில் பல காயங்கள் இருக்கலாம். வேதனைகள் இருக்கலாம். இந்த மரணத்தை, இந்த சோகமான சம்பவத்தை என் குடும்பத்தில் ஆண்டவர் ஏன் அனுமதித்தார்? ஏன்? ஏன்? என்ற பல கேள்விகள் உங்கள் உள்ளத்தில் எழக்கூடும். இந்த கேள்விகள் எல்லாவற்றிற்கும் ஒரு வேளை உங்களுக்குப் பதில் கிடைக்காமல் இருக்கலாம், கிடைக்காமலே போகலாம்.

## 1(d) என் மகன் இறந்த போது ஆண்டவர் எங்கே இருந்தார்?

ஒரு தேசிய நெடுஞ்சாலையில் ஒரு விபத்து நடந்தது. அதில் ஒரு வாலிபன் மரித்து விட்டான். இதைக் கேட்ட அவனது தகப்பன் மகனை இழந்த சோகத்தால் ஆண்டவர் மேல் கோபமடைந்தான். அடக்க ஆராதனையை நடத்திய போதகரைப் பார்த்து, “என் மகன் சாலை விபத்தில் மரித்த போது, இந்த ஆண்டவர் எங்கே இருந்தார்?'' என்று கேட்டாராம். அதற்கு அந்த போதகர், “தன்னுடைய மகன் இயேசு, சிலுவையில் மரித்த போது ஆண்டவர் எங்கே இருந்தாரோ, அதே இடத்தில் தான் உங்கள் மகன் மரித்த போதும் ஆண்டவர் இருந்தார்'' என்று பதில் கொடுத்தாராம். சரியான பதில், பொருத்தமான பதில் – அருமையானவர்களே, நமது குடும்பத்தில் நடந்த சோக சம்பவத்தின் நிமித்தம் ஆண்டவரைக் குற்றவாளிக் கூண்டிலே நிறுத்த வேண்டாம். இது நமது இமாலயத் தவறு என்பதை உணர வேண்டும்.

யோவானுடைய உடலை அடக்கம் பண்ணிய கையோடு அவரது சீஷர்கள், இந்தச் செய்தியை இயேசுவிடம் போய் சொன்னது போல, அருமையான சகோதரனே, சகோதரியே உன்னுடைய வாழ்க்கையில் ஏற்பட்ட சோகத்தையும், கவலையையும் முதலாவது இயேசுவிடம் சென்று சொல்லிவிடு. ஒருவேளை இதுவரை நீ சொல்ல மறந்திருப்பாயானால், இப்பொழுதாவது உன் இயேசுவிடம் சொல்லிவிடு. இயேசு இந்த செய்தியைக் கேட்டவுடன் (மத். 14 : 12, 13) ஒரு வனாந்தரமான இடத்திற்கு ஏறிப்போனார் என்று வாசிக்கிறோம். நிச்சயமாக அங்கு ஜெபிப்பதற்காகத்தான் போயிருக்க வேண்டும். அதேபோல, நீயும் நானும் அவரோடு கூட ஜெபிக்கும்படி நம்மையும் அழைக்கிறார்.

அன்னாள், மனங்கசந்து, மிகவும் அழுது, கர்த்தரை நோக்கி வெகு நேரம் விண்ணப்பம் பண்ணினாள். அவளது இருதயத்தில் பேசினாள். மனக்கிலேசமும், விசாரமும் நிறைந்தவளாக கர்த்தருடைய சந்நிதியில் தன் இருதயத்தை ஊற்றி விட்டாள் (1 சாமு. 1 : 12 – 16).

## 2. நமது வாழ்க்கையில் குறைச்சல் ஏற்படும்போது

திருமணத்தில் திராட்சரசம் குறைவுபட்ட போது இயேசுவின் தாய் அவரை நோக்கி, “அவர்களுக்கு உதவி செய்” – என்றார்கள். (யோவான் 2 : 3)

‘‘வீட்டைக் கட்டிப்பார், கலியாணம் பண்ணிப்பார்’’ என்ற பழமொழி இயேசுவின் காலத்திலும் சரியாகத்தான் இருந்திருக்கிறது. வீடு கட்டுதல், கலியாணம் நடத்துதல் இந்த இரண்டு காரியத்திலும் நாம் எதிர்பாரா ஏதாவது ஒரு பிரச்சனை, திடீரென காளானைப் போல் முளைத்து எழும். விருந்தினர்களின் எண்ணிக்கை நமது எதிர்பார்ப்பைக் காட்டிலும் அதிகமாயிருக்கும். சமையல் செய்யும்பொழுது சமையல்காரன் ஏதாவது தவறு செய்திருப்பான். ஏதாவது ஒரு பொருளை யாராவது அவசரத்தில் கீழே கொட்டியிருப்பார்கள். கட்டட காண்ட்ராக்டர் திடீரென ஆள் காணாமல் போய் விடுவார். அல்லது அதிக பணம் கேட்பார். ஏதாவது ஒரு அசம்பாவிதம் நடந்திருக்கும். திருமண வைபவத்தில் ஏதாவது ஒரு குறை இருந்தால்தான் அந்தத் திருமணம் ஆசீர்வதிக்கப்படும்: பூரணப்படும் என்று சிலர் சொல்வதை நான் கேட்டிருக்கிறேன். இது உண்மையோ, பொய்யோ, இப்படிச் சொன்னால் திருமணத்தில் குறைவு ஏற்பட்டுவிட்டதே – என்று கவலைப்படுபவர்களுக்கு இந்த வார்த்தைகள் கொஞ்சம் ஆறுதலாக இருக்கும் என்பதில் சந்தேகமேயில்லை. இப்படிப்பட்ட வார்த்தைகள் மனரீதியாக உற்சாகப்படுத்தும் நோக்கத்தோடு சொல்லப்படும் வார்த்தைகளில் மதக்கோட்பாட்டையோ, நம்பிக்கையையோ நாம் பார்ப்பது தவறு. ஏதாவது ஒரு பொருள் கை தவறி விழுந்தால் – தவறுவது லாபம் என்பார்கள். ஒரு பொருள் தவறி விழுந்ததினால் மனம் சோர்ந்து போகாதீர்கள். அது நல்லதுக்குத்தான் என்று ஆறுதல் சொல்வதுதான் இந்த நோக்கம்.

ஆம்! நமது வாழ்க்கையில் ஒரு திருமணத்தை நடத்துகிறோமோ, நடத்தவில்லையோ, வீட்டைக் கட்டுகிறோமோ, இல்லையோ, நமது வாழ்க்கையில் ஏதாவது ஒரு வழியில் நமக்கு குறைச்சல் ஏற்படுவது சகஜம். அந்தக் குறைச்சலைப் பற்றி நாம் கவலைப்படாமல், மரியாளைப் போல நாமும் இயேசுவிடம் சென்று, ‘‘ஆண்டவரே, இந்த குறைச்சல் என் வாழ்க்கையில் ஏற்பட்டுள்ளது. இந்தக் குறைச்சலை நிவர்த்தி செய்ய நீர் எனக்கு உதவி செய்யும்’’ என்று இன்றே இப்பொழுதே கேளுங்கள். அவர் நிச்சயமாக உங்கள் வாழ்க்கையில் ஒரு அற்புதத்தை செய்து உங்கள் குறைச்சல்களை இயேசு கிறிஸ்து நிறைவான ஐசுவரியத்தினால் நிறைவாக்குவார் (பிலி. 4 : 19).

இதே போன்ற சூழ்நிலையில் ஒரு விதவை ஒரு தீர்க்கதரிசியின் மனைவி – எலிசாவினிடத்தில் ஓடி வந்தாள். அவளது பிரச்சனை – கானா ஊர் கலியாணத்தில் ஏற்பட்ட குறைச்சலைக் காட்டிலும் பன்மடங்கு பெரிய பிரச்சனை – அவளது குறைச்சல் மிகப் பெரிய குறைச்சல். 2 இராஜா 4 : 1 – 7 பகுதியை வாசித்துப் பாருங்கள்.

இந்த விதவையின் புருஷன் ஒரு தீர்க்கதரிசி. மற்றவர்களுக்கு தீர்க்கதரிசனம் உரைத்தான். தனது குடும்பத்திற்கு தீர்க்கதரிசனம் கூற மறந்து விட்டான். கடன் வாங்கினான், அந்தக் கடனை திருப்பிக் கொடுக்க முடியாத சூழ்நிலையில் இறந்து விட்டான். தன் குடும்பத்திற்கு அவன் விட்டுச் சென்ற ஒரு பெரிய சொத்து என்ன தெரியமா? “சேட்டிடம்” வாங்கிய ஒரு பெரிய கடன். அந்தக் கடனை கொடுத்தவன் அந்த விதவையின் இரண்டு மகன்களையும் தனக்கு அடிமையாக்கிக் கொள்ள கேட்கிறான். செய்வது அறியாத அந்த விதவை எலிசா தீர்க்கதரிசியிடம் போனால் தனது கடன் தீரும் – என்ற உண்மையை மாத்திரம் நன்கு அறிந்திருந்தாள். இந்த அறிவுதான் அவளது வாழ்க்கைக்கு விடிவு ஏற்படும் வழியைத் திறந்த திறவுகோல்.

### 2(a) முதலாவது உங்கள் குறைகளை இயேசுவிடம் போய் சொல்லுங்கள்

இதை வாசிக்கின்ற நீங்களும், நானும் இதே அறிவைப் பயன்படுத்த பழக வேண்டும். குறைவுகள் ஏற்பட்டால் அந்தக் குறைவை – நிறைவு படுத்தும் சக்தி படைத்த இயேசுவிடம் நாம் போக வேண்டும். இந்த அறிவு ரொம்ப முக்கியமானது.

மேலே கொடுக்கப்பட்ட இரு சம்பவங்களையும் கானா ஊர் கலியாணத்தில் ஏற்பட்ட குறைச்சலையும் – எலிசாவிடம் வந்த ஏழை விதவையின் வாழ்க்கையில் ஏற்பட்ட பணக் குறைச்சல் – இந்த இரண்டு சம்பவங்களிலும் எப்படி குறைச்சல் சந்திக்கப்பட்டது என்பதை நாம் ஆராய்வது 21–ஆம் நூற்றாண்டில் வாழும் நமக்கு பயனுள்ளதாக இருக்கும்.

இயேசுவும், எலிசாவும் – இருவருமே ஒரே மாதிரி கட்டளைகளைக் (வெறும் பாத்திரங்களை வைத்தல்) கொடுப்பதை நாம் கவனிக்கலாம்.

இயேசு காலியாக உள்ள கற்சாடிகளை வைக்கும்படி கட்டளையிட்டார். அதே போல் எலிசாவும் வெறும் பாத்திரங்களை வாங்கும்படி கட்டளையிட்டார்.

இரண்டாவது, இயேசு சொல்கிறபடி செய்யுங்கள் என்று மரியாள் ஆலோசனை கூறினாள். அதேபோல், வேலைக்காரர்களும் இயேசு சொன்னபடியே வெறுமையான கற்சாடிகளை வைத்தார்கள். எலிசா சொன்னபடியே அந்த விதவையும் செய்தாள்.

ஆம்! நமது வாழ்க்கையில் அவ்வப்பொழுது ஏற்படும் குறைகள் நிவர்த்தியாக வேண்டுமானால், நாம் இயேசுவிடம் நமது குறைகளைச் சொல்ல வேண்டும்.

### 2(b) உன்னிடத்தில் உள்ளதை ஆண்டவரிம் கொடு:

இரண்டாவது, உன்னிடத்தில் என்ன இருக்கிறது என்று கேட்ட எலிசாவினிடத்தில், நம்மிடத்தில் உள்ள சிறிய பொருளை – ஒரு குடம் எண்ணெயாக இருக்கலாம் – மறைக்காமல் ஒளிக்காமல் – நம்மிடத்தில் இருப்பதை ஆண்டவரிடத்தில் சொல்லிவிட வேண்டும். ''எங்கிட்டே உண்மையிலேயே ஒன்றுமேயில்லை'' என்று பொய் சொல்லி விடாதீர்கள். உங்களிடத்தில் உள்ள ஒரு சிறு பொருளை – ஐந்து அப்பங்களையும், இரண்டு மீன்களையும் இயேசுவிடம் கொடுங்கள். நிச்சயமாக ஆண்டவர் அற்புதம் செய்வார்.

ஒரு சபையில் ஒரு ஜெபக்கூட்டம் நடந்தது. புதிய ஆலயம் கட்டுவதற்காக விசேஷித்த ஜெபம் ஏறெடுக்கப்பட்டது. ஆலயம் கட்டுமானப் பணிக்கு உங்களால் கொடுக்க முடிந்த பொருட்களை – செங்கல்லோ, சிமெண்ட்டோ, பணமோ கொடுங்கள் – என்று போதகர் கேட்டுக் கொண்டார். அந்த ஜெபக் கூட்டத்திற்கு கொஞ்சம் பேர்கள் வந்திருந்தார்கள். அதில் 4 வயது சிறுவனும் ஒருவன். அடுத்த நாள் காலையில் அச்சிறுவன் தனது மூன்று சக்கர வண்டியில் 4 செங்கற்களை ஏற்றிக் கொண்டு அருகிலிருந்த பாஸ்டர் வீட்டிற்கு வந்து ''பாஸ்டர் ஆலயம் கட்ட 4 செங்கற்கள் கொண்டு வந்திருக்கிறேன்'' என்று சொன்னவனிடம் இதைக் கண்ட பாஸ்டர் அப்படியே கண்ணீர்விட்டு அழுதார். இச்சம்பவத்தை ஆலய ஆராதனையில் சொன்னார் – பத்திரிகையிலும் வெளி வந்தது. அதன் விளைவாக அவர்கள் ஆலயம் கட்டுவதற்குத் தேவையான பணத்தைக் காட்டிலும் பன்மடங்கு காணிக்கை குவிந்தது. புதிய ஆலயம் கட்டப்பட்டது.

பார்த்தீர்களா, அச்சிறுவன் கொடுத்த 4 செங்கற்கள் செய்த அற்புதத்தை! நீங்களும் உங்களிடம் உள்ள 4 செங்கற்களை ஆண்டவரிடத்தில் கொடுங்கள். அதன்மூலம் ஒரு பெரிய ஆலயமே எழும்பும்.

### 2(c) இயேசு சொன்னபடியே செய்யுங்கள்

மூன்றாவது, இயேசு சொன்னபடி நாம் செய்ய வேண்டும். இந்த மனுஷனுக்கு என்ன, பைத்தியமா பிடிச்சிருக்கு. வெறும் கற்சாடியை வைக்கச் சொல்லி வெறும் தண்ணீரை ஊற்றச் சொல்கிறாரே என்று முணங்கிக் கொண்டே கற்சாடியை வேலைக்காரர்கள் வைக்கவில்லை. மாறாக, முழு நம்பிக்கையோடு வைத்தார்கள். வெறும் கற்சாடியை வைப்பதும், வெறும் பாத்திரங்களை வாங்கி வீட்டில் வைப்பதும் – கொஞ்சம் பைத்தியக்காரத்தனமாக தோன்றும். எரிகோ மதிலை யோசுவாவும் இஸ்ரவேல் மக்களும் சுற்றி வலம் வந்தது – பார்க்கிறவர்களுக்கு கொஞ்சம் பைத்தியக்காரத்தனமாக தோன்றத்தான் செய்யும். ஆனால், ஆண்டவர் அற்புதம் செய்வதற்கு அது மிக அத்தியாவசியமானது. மனிதனுக்கு பைத்தியமாக தோன்றுபவைகள் மூலமாகத்தான் ஆண்டவர் அற்புதத்தைச் செய்ய முடியும்.

இதை வாசிக்கும் வேளையில், உங்களது வாழ்க்கையில் என்ன குறைச்சலோ எனக்குத் தெரியாது. உங்களுக்கும் ஆண்டவருக்கும் மட்டும்தான் தெரியும் – சோர்ந்து போகாதீர்கள். பணக்குறைச்சலா? மனக்குறைச்சலா? சமாதானக் குறைச்சலா? திடீரென குடும்பத்தில் ஒரு பிரச்சனையா? வேலையை இழக்கும் ஒரு நிலையா? ஏதோ ஒன்று உங்கள் மனதில் ஒரு முள்ளாக இருக்கிறதா? வியாதியா? மன வேதனையா? எதுவாக இருந்தாலும், இயேசுவிடம் போய் உங்கள் குறைகளை தைரியமாகச் சொல்லுங்கள். அவர் உங்களுக்கு தீர்வு கொடுப்பார். **நீங்கள் ஒன்றுக்கும் கவலைப்படாமல்**

**எல்லாவற்றையும் குறித்து ஜெபத்தினால் தேவனுக்குத் தெரியப்படுத்துங்கள்.** அப்பொழுது யாராலும் புரிந்து கொள்ள முடியாத தெய்வீக சமாதானம் உங்கள் இருதயங்களையும், சிந்தனைகளையும் நிரப்பட்டும் (பிலி. 4 : 6,7).

### 3. இயேசுவிடம் சென்ற குருடர்கள்

வழியருகே உட்கார்ந்திருந்த இரண்டு குருடர்கள் இயேசு அந்த வழியாக வருகிறார் என்று கேள்விப்பட்டு "ஆண்டவரே, எங்கள் கண்களைத் திறக்க வேண்டும்" – என்று சத்தமாக கதறினார்கள் (மத். 20 : 30-34).

அந்த இரண்டு குருடர்களுக்கு அது ஒரு பொன்னான வாய்ப்பு. அவர்கள் இயேசு இருக்கும் இடத்தை தேடிப் போவது என்பது முடியாத ஒரு காரியம். ஆனால், இன்று அந்த இயேசு அவர்கள் உட்கார்ந்து பிச்சை எடுக்கும் தெரு வழியாக வருகிறார். அவர்களுக்காகவே அவர்களைத் தேடி அந்த தெரு வழியாக வருகிறார் – என்று இருவருமே எண்ணினார்கள். என்ன பொன்னான வாய்ப்பு! ஒரு மனிதனுடைய வாழ்க்கையில், இது போன்ற பொன்னான வாய்ப்புகள் ஒரே ஒரு தரம் தான் கதவைத் தட்டும். இத்தருணத்தை நழுவவிட முடியாது. இந்த இரண்டு குருடர்களைப் பொறுத்த வரையில், இன்றும் அல்லது என்றுமே இல்லை – Now or Never என்றதொரு சூழ்நிலையை அவர்கள் எதிர் கொண்டிருந்தார்கள். எனவே, அவர்கள் இருவரும் சேர்ந்து **"இயேசுவே, தாவீதின் குமாரனே எங்களுக்கு இரங்கும்"** என்று கதறினார்கள். ஆனாலும், இயேசு கவனிக்கவில்லை. இயேசுவைச் சுற்றிலும் இருந்தவர்கள் இந்த 2 குருடர்களையும் அதட்டினார்கள். ''சாமி வரம் கொடுத்தாலும் பூசாரி விடமாட்டான்'' என்ற பழமொழிக்கிணங்க, இயேசுவைச் சுற்றிலும் இருந்தவர்கள் இந்த குருடர்களது கூக்குரல் இயேசுவின் செவியில் எட்டுவதற்குத் தடையாக இருந்தார்கள். எனவே, தங்களது சத்தத்தை சற்று உயர்த்தி – மற்றவர்களுக்கு சற்று எரிச்சலை உண்டாக்கினாலும் பரவாயில்லை என்று எண்ணி – அவர்கள் இருவரும் வெகு சத்தமாகக் கூக்குரலிட்டார்கள். உங்களுக்கு என்ன வேண்டும் என்று கேட்ட இயேசுவிற்கு அவர்கள் இருவரும் **"எங்கள் கண்களைத் திறவும்"** என்று கேட்டார்கள்.

திராட்சரசம் குறைந்து விட்டது என்றோ, கடன்காரன் நெருக்குகிறான் என்றோ, எனக்கு பணம் தேவை என்றோ இவர்கள் கேட்காமல், தங்களுக்கு கண்பார்வை மாத்திரம் தேவை என்று இயேசுவிடம் முறையிட்டார்கள். தங்களுக்கென்று பொருள், ஆஸ்தி, அழகு கேட்காமல், ஆண்டவரின் படைப்பில் விட்ட குறையை ஆண்டவரிடத்திலேயே பூர்த்தி செய்ய கேட்பது நியாயம்தானே.

### 3(a) கண்ணிருந்தும் குருடர்கள்

ஒருவேளை இதை வாசிக்கிற நாம் அனைவருக்குமே இந்த கண்பார்வை இருக்கிறது உண்மைதான். ஆனால் நம்மில் சிலர், சில விஷயங்களில் கண் இருந்தும் குருடராக இருக்கிறோம். சில அப்பட்டமான உண்மைகளைக் கூட நாம் சரியாக புரிந்து கொள்ள இயலாத ஒரு நிலைமையில் இருக்கிறோம். எம்மாவூருக்குப் போன சீஷர்களைப் போல நமது மனக்கண்கள் குருடாக இருக்கிறது. இயேசு அவர்கள் கூட நடந்து வந்தாலும் அவர்களால் இயேசுவை அடையாளம் கண்டு கொள்ள முடியவில்லை. காரணம் அவர்கள் கண்கள் மூடப்பட்டிருந்தது. காரணம் என்ன? அவர்களது மனச் சோர்வுதான். இதை வாசிக்கிற நீங்கள் கூட உங்கள் வாழ்க்கையில் நிகழ்ந்த சில சம்பவங்களினால், நீங்கள் சமீபத்தில் சந்தித்த சில தோல்விகளினால் மனம் சோர்ந்து போய் காணப்படலாம். சில விஷயங்களை நீங்கள் புரிந்து கொள்ள இயலாத மன நிலையில் எதையும் பார்க்க வேண்டிய சரியான கோணத்தில் பார்க்க இயலாத நிலையில் இருக்கலாம். ஒரு குறிப்பிட்ட விஷயத்தில் உங்களுக்கும், உங்கள் குடும்பத்தாருக்கும் உடன்பாடு இல்லை. உங்கள் குடும்பத்தில் யாரோ ஒருவர் "நான் பிடித்த முயலுக்கு மூன்று கால்கள் தான்" என்று பிடிவாதமாக இருப்பதுதான். இந்த முரண்பாடான பிரச்சனைக்கு காரணம், பிடிவாதம் என்பது எந்த டாக்டராலும் குணப்படுத்த முடியாத வாதம் என்பதை நாம் உணர வேண்டும்.

### 3(b) மனச் சோர்வும் கோபமும்

கண் இருந்தும் குருடராக நாம் இருப்பதற்கு மனச் சோர்வும், பிடிவாதமும் மாத்திரமல்ல. இன்னொரு முக்கிய காரணம் என்ன தெரியுமா? ஆதியாகமம் 21 : 19-ஆம் வசனத்தை வாசியுங்கள். அதில் ஆகாரின் கண்களை ஆண்டவர் திறந்தார். அப்பொழுது அவள் ஒரு தண்ணீர் துரவைக்கண்டு பிள்ளைக்கு குடிக்கக் கொடுத்தாள் என்று வாசிக்கிறோம்.

இந்த சம்பவத்தில் ஆகாரின் கண்கள் ஏன் மூடப்பட்டிருந்தது என்று நாம் யோசிக்க வேண்டும்.

தனது புருஷனாகிய ஆபிரகாமின் வீட்டை விட்டு வெளியே துரத்தப்பட்ட அவளது உள்ளத்தில் கோபமும், தாபமும் குடி கொண்டிருந்தது. ஆபிரகாம் மேலும், சாராள் மேலும் அவளுக்கு எரிச்சல் இருந்தது. இதுதான் அவளது கண்களை மூடியது.

நமது உள்ளத்தில் மற்றவர்கள் மேல் கோபம், எரிச்சல் இருக்கும்போது (நமது கோபமும், எரிச்சலும் நியாயமானதாக இருக்கலாம்) நமது சிந்தனை தடம் புரளுகிறது. நமது சிந்தனை தடுமாறும் போது நாமும் தடுமாறுகிறோம், அவசரப்படுகிறோம். அவசரக்காரனுக்கு புத்தி மட்டு. இதன் விளைவாக நாம் சில விஷயங்களைச் சரியான கோணத்தில் பார்க்க தவறிவிடுகிறோம். சுருக்கமாகச் சொன்னால், நாம் கண்ணிருந்தும் குருடராக மாறிவிடுகிறோம்.

**''ஆண்டவரே, எங்களது கண்களைத் திறவும்''** என்று இயேசுவிடம் கேட்ட அந்த இரண்டு குருடர்களைப் போல, நாமும் ஆண்டவரிடத்தில் எங்களுக்கு பார்வையைத் தாரும் என்று ஜெபிக்கத் தவறக் கூடாது. எம்மாவூருக்குப் போன சீஷர்களைப் போல நமது உள்ளத்தில் உள்ள மனச்சோர்வை ஆண்டவர் நீக்குவாராக. ஆகாரைப் போல நமது உள்ளத்தில் உள்ள கோபம் எரிச்சல் இவற்றை அகற்றி, நமது குருட்டுத் தன்மையை மாற்றும்படியாக ஆண்டவரிடத்தில் ஜெபிப்போம்.

## 4. தோல்வியை சந்திக்கும்போது ஆண்டவரிடம் போங்கள்

ஆயி பட்டணத்தில் சந்தித்த படுதோல்வியின் நிமித்தம் இஸ்ரவேல் மக்களின் இருதயம் பயத்தினால் கரைந்து தண்ணீரைப் போல ஆயிற்று. அப்பொழுது யோசுவா தன் வஸ்திரங்களைக் கிழித்துக் கொண்டு அவனும் மூப்பர்களும் கர்த்தருக்கு முன்பாக முகங்குப்புற விழுந்து கிடந்தார்கள் (யோசுவா. 7 : 6).

இந்த உலகத்தில் தோல்வியை சந்திக்காத மனிதர்கள் யாருமே கிடையாது. ஆனால், தோல்வியைச் சந்திக்கும்போது அதை எப்படி சமாளிப்பது என்பதுதான் தாவீது, யோசுவா போன்ற தலைவர்களின் திறமை, வெற்றி காண விரும்பும் எந்த மனிதனும் தோல்வியைக் கண்டு துவளக்கூடாது. தோல்விதான் வெற்றிக்கு முதல்படி என்ற தத்துவத்தை நன்கு கற்றவர்கள்தான் வெற்றியின் ஏணிப்படியில் ஏற முடியும்.

## 4(a) உங்கள் பாளையத்திலிருந்து பாவத்தை அகற்றுங்கள் :

ஆண்டவர் வாக்குத்தத்தம் பண்ணிய தேசத்தை நோக்கி யோசுவா வெற்றி நடை போட்டுக் கொண்டு வந்தான். எரிகோவை வென்றான்: யோர்தான் நதியை கடந்தான். எரிகோவை வென்ற வெற்றிக் களிப்பில் ஒரு வேளை யோசுவா மிதந்திருக்கக் கூடும். நமது கிரிக்கெட் அணி ஆஸ்திரேலியாவை ஜெயித்த பின்பு அடுத்த போட்டியில் பங்களாதேஷிடம் தோல்வியடைந்தால் எப்படியிருக்குமோ அதுபோல எரிகோ பட்டணத்தை வீழ்த்திய பின்பு ஆயி பட்டணத்தை யோசுவா Under Estimate பண்ணி விட்டான். 3000 பேர்களை அனுப்பினால் போதும் என்று எண்ணி அனுப்பினான். ஆனால், இஸ்ரவேல் படை படு தோல்வியடைந்து திரும்பியது. தோல்வியடைந்த செய்தியைக் கேட்டுவிட்டு, யோசுவா மனம் உடைந்து விட்டான். மனச்சோர்வினால் வாழ்க்கையின் விளிம்பிற்கே வந்துவிட்டான். தலையில் மண்ணைவாரிப் போட்டுக் கொண்டு, ஆண்டவரது சமூகத்தில் ஆண்டவரே, நான் என்ன செய்வது – என்று விடை கேட்டு – காலை 9 மணி முதல் மாலை 5 வரை – விழுந்து கிடந்தான். அப்பொழுது ஆண்டவர் அவனை எழச் செய்து, இஸ்ரவேல் பாளையத்திற்குள் பாவம் நுழைந்து விட்டது. அதை முதலில் அகற்று என்று கட்டளையிடுகிறார். ஆகான் என்ற மனிதன் எரிகோ பட்டணத்தில் வெள்ளியையும், பொன்னையும் திருடி தன் கூடாரத்தில் ஒளித்து வைத்திருந்தான். அதைக் கண்டு பிடித்து யோசுவா ஆகானைக் கல்லெறிந்து கொல்லுகிறான். இந்த பாவப் பரிகாரம் நிறைவேற்றப்பட்ட பின்பு, யோசுவாவிற்கு இந்த ஆயிப் பட்டணத்தின் மேல் எளிதில் வெற்றி கிடைத்து விட்டதாக நாம் நினைக்கக் கூடாது. ஏன் தெரியுமா? ஆகானின் பாவத்தை இஸ்ரவேல் கூடாரத்தை விட்டு அகற்றியதோடு நின்று விடாமல் அதைத் தொடர்ந்து இன்னொரு முக்கியமான காரியத்தை அவன் திட்டமிடுகிறான். யோசுவா ஆயிப்பட்டணத்தை தோற்கடிக்க, அவன் முன்பு உபயோகித்த யுத்த அணுகு முறையை தலை கீழாக மாற்றுகிறான். ஆம், இந்த ஆயி யுத்தத்தில் யோசுவா கையாண்ட முறை மிகவும் ராஜதந்திரம் நிறைந்தது.

**4(b) புதிய அணுகு முறையைக் கையாளுங்கள்:**

ஒரு விஷயத்தில் ஒரு முறை ஏற்கனவே தோல்வியை தழுவி விட்டீர்கள். எனவே அடுத்து இன்னொருமுறை முயற்சிக்கும் போது, வெகு ஜாக்கிரதையாக இருக்க வேண்டும்.

பாதிப்படையை ஒளித்து வைத்து, மீதமுள்ள பாதிப்படை ஆயி பட்டணத்தோடு யுத்தம் நடத்தி, பயந்து ஓடுவது போல பாசாங்கு செய்து, ஒளிந்துள்ள பாதிப்படை பட்டணத்தைப் பிடித்து தீ வைப்பது - பின்பு பின் வாங்கி ஓடிய பாதிப்படை ஆயி பட்டணத்தின் போர் வீரர்களை எதிர்த்துப் போராடி அவர்களை நிலை குலையச் செய்வது, இப்படிப்பட்ட அருமையான யுத்த யுக்தி முதல்தோல்விக்கு பின்பு தான் யோசுவாவின் மூளையில் உதித்தது என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. "கெட்ட பின்பு தான் எட்டு புத்தி வரும்" என்ற பழமொழி எவ்வளவு உண்மை!

இதை வாசிக்கிற நீங்கள் ஒரு வேளை உங்கள் வாழ்க்கையில் யோசுவாவைப் போல தோல்வியை சந்தித்திருக்கக் கூடும். சோர்ந்து போகாதீர்கள். ஆண்டவரிடத்தில் போய் சொல்லுங்கள். அந்தத் தோல்வியை நினைத்து, தலையில் கை வைத்து அழுது புலம்பிக் கொண்டிருப்பதினால் யாருக்கும் எந்தப் பலனும் இல்லை. அடுத்து ஆக வேண்டிய காரியத்தை கவனியுங்கள்.

உங்கள் தோல்வியை வெற்றியாக மாற்றுவதற்கு நீங்கள் எடுக்க வேண்டிய படிகள் - முதலாவது உங்கள் வாழ்க்கை என்ற கூடாரத்தில் ஒளிந்திருக்கும் 'ஆகான்' போன்ற பாவங்களை அடையாளம் கண்டுபிடித்து அவற்றை அகற்றுங்கள். இரண்டாவதாக இதுவரை நீங்கள் சிந்தித்திராத ஒரு புது வழியில் சிந்தியுங்கள். ஒரு புதிய திட்டத்தை உருவாக்குங்கள். வெற்றி உங்கள் வாசற்படியில் உங்களுக்காக காத்திருக்கும்.

**எழும்பு! எழும்பு! சீயோனே, உன் வல்லமையைத் தரித்துக் கொள்; பரிசுத்த நகரமாகிய எருசலமே, உன் அலங்கார வஸ்திரங்களை அணிந்து கொள்.**

**தூசியை உதறிவிட்டு எழுந்திரு; எருசலேமே, வீற்றிரு; சிறைப்பட்டுப்போன சீயோன் குமாரத்தியே, உன் கழுத்திலுள்ள உன் கட்டுகளை அவிழ்த்து (அறுத்து) விடு: எழும்பிப் பிரகாசி; உன் ஒளி வந்தது, கர்த்தருடைய மகிமை உன் மேல் உதித்தது (ஏசா. 52:2, 60:1).**

**5. எசேக்கியா ராஜா ஆலயத்தில் ஆண்டவரிடத்தில் அபயமிடுகிறான்**

அசீரியா ராஜா, யூதாமேல் படையெடுத்து வந்தான். அவன் தனக்கு எழுதிய அவதூரான கடிதத்தை எசேக்கியா ராஜா வாசித்துவிட்டு கர்த்தருடைய ஆலயத்திற்குப் போய் அதைக் கர்த்தருடைய சமூகத்தில் விரித்து வைத்து பின் வருமாறு ஜெபித்தான்.

"கர்த்தாவே உமது செவியைச் சாய்த்து கேளும்; உமது கண்களைத் திறந்து பாரும். அசீரியா ராஜா சனகெரிப் ஜீவனுள்ள தேவனாகிய உம்மை நிந்தித்த வார்த்தைகளைக் கேளும்" - என்றான் (ஏசா. 37:17).

பல போராட்டங்கள் நிறைந்ததுதான் மனித வாழ்க்கை. யூதா தேசத்தின் ராஜாவாகிய எசேக்கியாவை எதிர்த்து அருகிலுள்ள அசீரியா ராஜா சனகெரிப் படையெடுத்து வந்தான். அதற்கு முன்னோடியாக ஒரு பயமுறுத்தல் கடிதத்தை எழுதி தன் ஸ்தானாதிபதிகள் மூலமாக அனுப்புகிறான். ஒழுங்காக தன்னிடம் சரணடைந்து விடும்படியாக கேட்கிறான்: கேவலமாகப் பேசுகிறான்.

உண்மையிலேயே எசேக்கியா ராஜாவின் வாழ்க்கையில் மறக்க முடியாத - பயங்கரமான நாள் அது. எதிரி எழுதிய கேவலமான, அசிங்கமான வார்த்தைகள், விசேஷமாக, சாப்பாட்டைத்தான் சாப்பிடுகிறாயா அல்லது மலத்தை சாப்பிடுகிறாயா? என்ற கேள்வி அவனை நிலைகுலையச் செய்தது. படுக்கையில் தூக்கம் வரவேயில்லை. திடீரென அவனுக்கு ஒரு யோசனை தோன்றியது. காலையில் எழுந்தவுடனே அக்கடிதத்தை எடுத்துக் கொண்டு கர்த்தருடைய ஆலயத்திற்கு ஓடுகிறான். அங்கே தேவனுடைய சமூகத்தில், அக்கடிதத்தை திறந்து வைத்து ஆண்டவரிடத்தில் அபயமிடுகிறான்.

எசேக்கியா ராஜாவின் அபயக்குரலைக் கேட்ட ஆண்டவர் அவனுக்கு உடனடியாக சட்டென, தந்தியைப்போல பதில் அளிக்கிறார். ஏசாயா தீர்க்கதரிசி மூலமாக ஒரு செய்தியை அனுப்புகிறான். அந்த செய்தியை வாசியுங்கள்.

# IBT-இன் நிகழ்வுகள்



11.04.2026 அன்று கோவை IBT மையத்தில் லம்பானி மொழி புதிய ஏற்பாடு புத்தகத்தை பிரதிஷ்டை செய்யும் Rev. Dr. கருணாகரன் அவர்கள்



லம்பானி மொழி புதிய ஏற்பாடு புத்தகத்தை Rev. Dr. கருணாகரன் அவர்கள் வெளியிட மொழி பெயர்ப்பாளர் சகோ. பரமேஷப்பா பெற்றுக் கொள்கிறார்.




லம்பானி மொழி புதிய ஏற்பாடு புத்தகத்தை IBT–இன் தலைவர் திரு. ஜெபஸ் செல்வின் அவர்கள் வெளியிட மொழி பெயர்ப்பாளரின் மனைவி பெற்றுக் கொள்கிறார்.



17.04.2026 அன்று கீழ் கோத்தகிரியில் தையல் பயிற்சி சான்றிதழை திரு. குமார் அவர்களிடம் பெற்றுக் கொண்ட பெண்களுடன் திரு. ராமலிங்கம் அவர்களும் அவர் மனைவியும்.



26.04.2026 அன்று போத்தனூர் CSI யூனியன் சபையில் தேவ செய்தியளிக்கும் TELC சபை முன்னாள் பிஷப் Rt. Rev. எட்வின் ஜெயக்குமார் அவர்கள்.



போத்தனூர் CSI யூனியன் சபையில் IBT ஊழிய விளக்கமளிக்கும் IBT பொருளாளர் திரு. M ஜான் வில்லியம் அவர்கள்.

# IBT-இன் நிகழ்வுகள்




01.05.2026 அன்று சென்னை பெரிய மேடு Salvation Army மையத்தில் நடைபெற்ற குடும்பக் கூடுகையில் நடைபெற்ற குறு நாடகம்.



குடும்பக் கூடுகையில் பங்கு பெற்றவர்களுக்கு பரிசுகள் வழங்கும் IBT – பொருளாளர் திரு. M. ஜான் வில்லியம் அவர்கள்.




குடும்பக் கூடுகையில் வேதாகம சரித்திரத்தைப் பற்றி விளக்கிக் கூறும் IBT பணித்தள இயக்குநர் திரு. சாமுவேல் ஞானதாஸ் அவர்கள்.



01.05.2026 அன்று மதுரையில் சௌராஷ்ட்ரா மொழியிலுள்ள வேதாகம செயலியை பிரதிஷ்டை செய்யும் IBT–இன் செயலர் திரு. வரமணிராஜ் அவர்கள்.




01.05.2026 அன்று மதுரையில் சௌராஷ்ட்ரா மொழியில் வெளியிடப்பட்ட வேதாகமத்தைக் குறித்து விளக்கும் மொழி பெயர்ப்பாளர் திரு. S.N. சங்கர் அவர்கள்.



ஏப்ரல் மாதம் 20-25 தேதிகளில் பாப்பன்பள்ளி சிறுவர் இல்லத்தில் நடைபெற்ற புதிய ஏற்பாடு சரிப்பார்ப்புப் பணியில் ஈடுபட்டுள்ள மொழி பெயர்ப்பாளர்களும், உதவியாளர்களும்.

**5(a) அழிவிற்கு முன் அகந்தை**

''சனகெரிப் நிமித்தம் நீ என்னை நோக்கி ஏறெடுத்த விண்ணப்பத்தை நான் கேட்டேன். அவன் எனக்கு விரோதமாக வீரியம் பேசினதை நான் கேட்டேன். நான் என் துறட்டை அவன் மூக்கிலும், என் கடிவாளத்தை அவன் வாயிலும் போட்டு அவன் வந்த வழியே திரும்பிப் போகப் பண்ணுவேன்" (ஏசா. 37 : 29) குதர்க்கம் நிறைந்த சனகெரிப்பிற்கு சரியான சாட்டையடி பதில், இந்த சனகெரிப்பின் Drama-வின் உச்சகட்ட Climax-ஐ கீழே வாசியுங்கள்.

இதைத் தொடர்ந்து கர்த்தருடைய தூதன் அசீரியரின் பாளையத்தில் 1,85,000 பேர்களைச் சங்கரித்தார். இதைக் கண்ட சனகெரிப் தன் நாட்டிற்கு வெட்கத்தோடு திரும்பினான். அங்கு அவன் தனது கோவிலுக்குப் போன போது, அங்கு சனகெரிப்பின் சொந்த மகன் எமும்பி அவனது அப்பாவைக் கொன்று விடுகிறான் (ஏசா. 36 – 38). இதை வாசிக்கும் போது ஆச்சரியமாகவும், சற்று பயமாகவும் இருக்கிறது.

''அரசன் அன்று கொல்லுவான்: தெய்வம் நின்று கொல்லும்'' என்று தான் நாம் கேள்விப்பட்டிருக்கிறோம். ஆனால், மேலே கொடுக்கப்பட்ட சம்பவத்தில் தெய்வம் கூட சில சமயம் அன்றே கொல்லும் போலத் தோன்றுகிறது.

இதை வாசிக்கிற உங்களது வாழ்க்கையில்கூட சில எதிரிகள் இருக்கலாம். நாம் மற்றவர்களுக்கு எதிரியாக இல்லாமலிருந்தாலும், நம்மை எதிரியாக எண்ணுகிறவர்கள் சிலர் இருக்கிறார்கள். அவர்கள் உங்களை அச்சுறுத்தலாம். நீங்களோ, பயப்படாமல் ஆண்டவரது ஆலயத்திற்குப் போங்கள். ஆண்டவரது சமூகத்தில் எல்லாவற்றையும் சொல்லுங்கள். கர்த்தர் உங்களை எல்லா பயத்திற்கும் நீங்கலாக்கி உங்களைக் காப்பார். ஆபத்து நாளிலே கர்த்தர் உங்களது ஜெபத்தை நிச்சயமாகக் கேட்பார். யாக்கோபின் தேவன் உங்களுக்கு உயர்ந்த அடைக்கலமாக இருப்பார். அவர் தமது பரிசுத்த ஸ்தலத்திலிருந்து உங்களுக்கு ஒத்தாசையை அனுப்பி உங்களை நிச்சயமாக ஆதரிப்பார்.

''இயேசுவிடம் போய் சொல்லுங்கள்'' என்ற தலைப்பில் செய்தியை இதுவரை சிந்தித்தோம். நீங்களும் இயேசுவிடம் போய் சொல்லுங்கள். உங்கள் பிரச்சனைகளை ஆண்டவரிடத்தில் போய் கூறுங்கள். யோவான் ஸ்நானகனுடைய சீஷர்கள் தங்களது துக்கத்தை இயேசுவிடம் போய் சொன்னார்கள். உங்கள் குடும்பத்தில் ஏற்பட்ட துக்கங்களையும், இழப்புகளையும் இயேசுவிடம் போய் சொல்லுங்கள். நிச்சயமாக அவர் ஆறுதல் அளிப்பார். இரண்டாவது கானா ஊர் கலியாணத்தில் ஏற்பட்ட திராட்சரசக் குறைச்சலை இயேசு நீக்கி நிறைவுபடுத்துகிறார். ஞானத்தில் குறைவு, பொருளாதாரத்தில் குறைச்சல், சமாதானத்தில் குறைச்சல் – இவை அனைத்தையும் இயேசு போக்குவதற்கு அவர் போதுமான–வராயிருக்கிறார். மூன்றாவதாக இரண்டு குருடர்கள் "ஆண்டவரே எங்கள் கண்களைத் திறவும்" என்று இயேசுவிடம் கேட்டார்கள். கண்களிருந்தும் குருடராக இராமல் ஆண்டவரே, பல விஷயங்களில் எங்களுக்கு பார்வையைத் தாரும், தெளிவைத் தாரும் என்று ஜெபியுங்கள்.

நான்காவதாக, யோசுவா, ஒரு மாபெரும் போர்வீரன் – ஆயிப் பட்டணத் தோல்விக்குப் பின்பு ஆண்டவரது சமூகத்தில் விழுந்து கிடந்தான் என்று சிந்தித்தோம். நீங்களும் தோல்வியைக் கண்டு துவண்டு போக வேண்டாம். தோல்விதான் வெற்றியின் முதல்படி. யோசுவா எழுந்து மீண்டும் போரிட்டு வெற்றி கண்டான். அது போலவே நீயும், எழும்பிப் புறப்படு.வெற்றி உனக்காக வாசற்படியில் காத்திருக்கிறது. கடைசியாக எசேக்கியா ராஜா தன் எதிரியாகிய அசீரியா ராஜாவின் பயமுறுத்தலின் நிமித்தம் ஆண்டவரிடத்தில் அபயமிட்டான். 'குரைக்கிர நாய் கடிக்காது' என்ற பழமொழி இந்த அசீரியா ராஜாவிற்கு மிகப் பொருத்தமானது. உங்களது எதிரியின் வார்த்தைகளைக் கேட்டு பயப்படாதீர்கள்.

**"நீ பயப்படாதே, நான் உன்னுடனே இருக்கிறேன்; திகையாதே, நான் உன் தேவன்; நான் உன்னைப் பலப்படுத்தி உனக்குச் சகாயம் பண்ணுவேன்...."**

உன்னோடு போராடியவர்களை நீ தேடினாலும் உன்னால் கண்டுபிடிக்க முடியாது. அவர்கள் இருந்த இடத்தையும் நீ காண மாட்டாய். உன் மேல் எரிச்சலாயிருந்தவர்கள் அனைவரும் வெட்கித் தலை குனிவார்கள்: அவர்கள் நாசமடைந்து ஒன்றுமில்லாமல் போவார்கள்" (ஏசா. 41 : 10 – 12).

**(இச்செய்தி Rev. Prof. S. பன்னீர் செல்வம்** அவர்களால் எழுதப்பட்டு, 2006 ஜூன் மாத இதழில் வெளியிடப்பட்டது**).**

# ஆசிரியர் மடல்

கிறிஸ்துவுக்குள் மிகவும் பிரியமான சகோதர, சகோதரிகளுக்கு சத்திய வார்த்தை பத்திரிகையின் சார்பாக எங்கள் அன்பின் வாழ்த்துதலைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

**''எல்லாக் காவலோடும் உன் இருதயத்தைக் காத்துக்கொள், அதனிடத்தினின்று ஜீவ ஊற்று புறப்படும்" (நீதி. 4 : 23).**

மனிதனுடைய சிந்தனைகள் முதலாவதாக இருதயத்திலிருந்துதான் தோன்றுகின்றன. பின்னர் அது மூளைக்கு அனுப்பப்பட்டு, உருவெடுத்து பின்பு அது செயலாக வெளிப்படுகிறது. சிலர் கோபப்பட்டால் நெடுங்காலமாய் தங்கள் இருதயத்ினுள் வைத்திருந்த எல்லாவற்றையும் வெளிப்படுத்தி விடுவார்கள். வேதபாரகரும், பரிசேயரும் இயேசுவினிடத்தில் வந்து, 'உம்முடைய சீஷர்கள் கை கழுவாமல் போஜனம் பண்ணி பாரம்பரியத்தை மீறுகிறார்கள்' என்று குறை சொன்னார்கள். அதற்கு இயேசு ''வாய்க்குள்ளே போகிறது மனிதனை தீட்டுப்படுத்தாது, வாயிலிருந்து புறப்படுகிறவைகள் தான் மனிதனை தீட்டுப்படுத்தும்'' என்றார். இஸ்ரவேல் ஜனங்கள் தங்களுடைய வெளிப்புறமான சரீர சுத்திகரிப்புக்கும், பாரம்பரிய சடங்காட்சாரங்களுக்கே அதிக முக்கியத்துவம் கொடுப்பார்கள். **''மனுஷன் முகத்தைப் பார்ப்பான்: கர்த்தரோ இருதயத்தைப் பார்க்கிறார்''** என்று 1 சாமு 16 : 7-இல் நாம் வாசிக்கிறோம். வெளிப்புறமான தோற்றமோ, பேச்சோ அல்லது செயலோ கர்த்தருக்கு முன்பாக நம்மை பரிசுத்தவான்களாய் மாற்றாது. கர்த்தர் நம்முடைய இருதயத்தின் நினைவுகளை ஆராய்ந்து அறிகிறார்.

இருதயத்திலிருந்துதான் பொல்லாத சிந்தனைகளும், கொலை பாதகங்களும், விபசாரங்களும், வேசித்தனங்களும், களவுகளும், பொய்ச் சாட்சிகளும், தூஷணங்களும் தோன்றி அது மனுஷனை தீட்டுப்படுத்தும் என்று இயேசு சொல்கிறார். எப்படி நாம் இந்தப் பாவம் நிறைந்த உலகத்திலே இப்படிப்பட்ட அசுத்தமான காரியங்களுக்கு நம்மை விலக்கி காப்பது? சங். 119 : 11 வசனம் இப்படியாகயிருக்கிறது **''நான் உமக்கு விரோதமாய்ப் பாவஞ்செய்யாதபடிக்கு, உமது வாக்கை என்னிருதயத்தில் வைத்து வைத்தேன்".** சரீர பிரகாரமான யுத்தத்தில் தங்களை காத்துக்கொள்ள பண்டைய காலங்களில் பட்டயங்களை உபயோகப்படுத்தினார்கள். நம்முடைய ஆவிக்குரிய யுத்தத்தில் பரிசுத்தத்தை காத்துக்கொள்ள ''தேவ வசனமாகிய ஆவியின் பட்டயத்தை எடுத்துக் கொள்ள வேண்டும்". இயேசு கிறிஸ்துவும் வனாந்தரத்திலே சாத்தானால் சோதிக்கப்படும்பொழுது, தேவ வசனத்தைக் கொண்டே அவனை ஜெயித்தார்.

எப்பொழுது நம்முடைய இருதயத்திலிருந்து ஜீவ ஊற்று உண்டாகும்? இரண்டுவிதமான காரியங்கள் மூலமாக. **1. கர்த்தருக்குப் பயப்படுதல் ஜீவ ஊற்று; அதினால் மரணக் கண்ணிகளுக்கு தப்பலாம் (நீதி 14 : 27). 2. இயேசுவினிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் எவனோ, அவன் உள்ளத்திலிருந்து ஜீவத்தண்ணீருள்ள நதிகள் ஓடும்" (யோ. 7 : 38).**

இயேசு கிறிஸ்து தன்னுடைய பிரயாணத்தின் போது யாக்கோபுடைய கிணறு அருகே இளைப்பாற உட்கார்ந்திருந்தார். அப்பொழுது ஒரு சமாரிய ஸ்திரீ தண்ணீர் எடுக்க வந்தாள். இயேசு அவளிடம் தாகத்திற்கு தா என்று தண்ணீர் கேட்டார். யூதர்கள் சமாரியரோடு சம்பந்தங்கலவாதவர்களான படியால், அந்த ஸ்திரீ இயேசுவிடம் நீர் யூதராயிருந்து சமாரிய ஸ்திரீயாகிய என்னிடத்தில் எப்படிக் கேட்கலாம் என்றாள். அதற்கு இயேசு, **''நீ தேவனுடைய ஈவையும், என்னையும் அறிந்திருந்தாயானால், நீயே அவரிடம் கேட்டிருப்பாய் அவர் உனக்கு ஜீவத்தண்ணீரை கொடுத்திருப்பார்''** என்றார். புறஜாதியாக நம் எல்லாரையும் பார்த்தும் இயேசு கேட்கிறார். நான் தாகமாயிருக்கிறேன் என்று. நம்முடைய இரட்சிப்பே அவருடைய தாகமாயிருக்கிறது. நாம் முதலாவது சமாரிய ஸ்திரீயைப் போல விசுவாசித்து அவரை ஏற்றுக்கொண்டும், கர்த்தருக்குப் பயந்தும் பாவங்களை விட்டு விலகும்பொழுது, நமக்கு அவர் நித்தியகாலமாய் ஊறுகிற ஜீவ நதியைத் தருவார்.

**...என் வாயின் வார்த்தைகளும், என் இருதயத்தின் தியானமும், உமது சமூகத்திலே பிரீதியாயிருப்பதாக (சங். 19 : 14).**

கடந்த ஏப்ரல் மாதம் லெந்துகாலக் கூட்டத்தின் கடைசி நாளான 1-ஆம் தேதியன்று சிவகாசி, வத்திராய்ப்பு CSI சபையில் திரு. G. வரமணிராஜ் அவர்கள் தேவசெய்தியளித்தார். இதே நாளில் கோவை, சிங்காநல்லூரிலுள்ள C.S.I. ஆலயத்தில் திரு. ஈஸ்டர் ராஜ் அவர்கள் தேவ செய்தியளித்தார். IBT ஊழியத்திற்கு சந்தர்ப்பம் அளித்த இரு திருச்சபை ஆயர்கள், செயலர், பொருளர் மற்றும் பங்குபெற்ற சபை மக்கள் அனைவருக்கும் IBT நன்றியைத் தெரிவிக்கிறது.

இதே மாதம் 11-ஆம் தேதியன்று கோவை IBT மையத்தில் லம்பானி மொழியிலுள்ள புதிய ஏற்பாடு, Rev. Dr. கருணாகரன் அவர்களால் பிரதிஷ்டை செய்யப்பட்டு, வெளியிடப்பட்டது. Rev. ஜான்ராஜா அவர்கள் IBT-இன் தலைவர் திரு. ஜெபஸ் செல்வின் அவர்கள், செயலர் திரு. வரமணிராஜ் அவர்கள், பொருளர் திரு. M. ஜான்வில்லியம் அவர்கள், பணித்தள இயக்குநர் திரு. சாமுவேல் ஞானதாஸ் அவர்கள், சில பிரதிநிதிகள், IBT முன்னேற்றப் பணியாளர்கள், அலுவலக ஊழியர்கள் மற்றும் கர்நாடகாவிலிருந்து தங்கள் லம்பானி பாரம்பரிய உடையணிந்த மொழிபெயர்ப்பாளர் சகோ. பரமேஷ், அவர் மனைவி, மகள் மற்றும் போதகர் ஆகியோர் பங்கு பெற்று கூடுகையை சிறப்பித்தார்கள். அதேநாள் மதியம், முன்னேற்றப் பணியாளர்களின் கூடுகை நடைபெற்றது. தமிழ்நாடு, கேரளாவிலிருந்து 9 பேர் பங்கேற்றனர். தங்கள் பணிகளை மேலும் சிறப்பாகச் செய்ய நல்ல ஆலோசனைகள் கொடுக்கப்பட்டது.

மறுநாள் (12.4.2026) காலை IBT-இன் நிர்வாகக் குழு கூட்டம் (G.C. Meeting) நடைபெற்றது. மாலை வரை நடைபெற்ற இக்கூடுகையில் ஊழியத்தின் பல்வேறு காரியங்களைக் குறித்து ஆலோசிக்கப்பட்டு, தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

IBT ஊழியத்தின் வளர்ச்சிக்காகவும், நடைபெற்று வரும் மொழிபெயர்ப்புப் பணிக்காகவும் ஜெபித்துக் கொள்ளுங்கள்.

கர்த்தர் தாமே உங்கள் அனைவரையும் செட்டைகளின் மறைவிலே காத்து, சகல நன்மைகளினாலும் ஆசீர்வதித்து வழி நடத்துவாராக!

ஷாலோம்!

கர்த்தருக்குள் அன்பான
உங்கள் சகோதரன்
**K. ஜெய்சிங்**

## உலகச் செய்திகள்

1. தமிழக முதல்வராக த.வெ.க. தலைவர் ச. ஜோசப் விஜய் (51) அவர்கள் 10.05.2026 அன்று பதவியேற்றார்.

2. இரு நாடுகளிடையேயான பொருளாதார கூட்டுறவு ஒப்பந்தத்தை மேம்படுத்துவதற்கான பேச்சுவார்த்தையைத் தொடங்க இந்தியாவும், தென்கொரியாவும் ஒப்புக்கொண்டன.

3. மேற்காசிய போர்ப் பதற்றத்தால் விநியோகச் சங்கிலி மற்றும் அத்தியாவசிய பொருள்களின் விலையில் ஏற்படும் தாக்கத்தை எதிர்கொள்ளும் விதமாக மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டத்துக்கு (100 நாள் வேலைத்திட்டம்) ரூ. 17,744 கோடியை மத்திய அரசு ஒதுக்கீடு செய்துள்ளது.

4. விளையாட்டுத் துறையில் வளர்ந்து வரும் இளம் திறமையாளர்களை ஊக்குவிக்கும் நோக்கில், தேசிய தரவரிசையில் முதலிடம் வகிக்கும் டென்னிஸ் வீரர் M.புனீத்துக்கு அதிகாரபூர்வ ஸ்பான்சராக (நிதி ஆதரவாளர்) இந்தியன் ஓவர்சீஸ் வங்கி (IOB) செயல்படுவதாக அறிவித்துள்ளது. அகில இந்திய டென்னிஸ் சங்கம் 14 வயதுக்குட்பட்டோர் பிரிவில் உள்ள 13 வயதான புனீத், லண்டன் விம்பிள்டன் தொடரில் (14 வயதுக்குட்பட்டோர்) பங்கேற்கும் தகுதியைப் பெற்று சாதனை படைத்துள்ளார்.

# IBT நிறுவனத் தலைவர் Rev. Prof. S. பன்னீர் செல்வம் அவர்களின் 13-ஆம் ஆண்டு நினைவு நாள் - 02.06.2026



**“கர்த்தருடைய வழிகளைக் கைக் கொண்டு வந்தேன்...”**

IBT ஊழியத்தின் நிறுவனத் தலைவர் Rev. Prof. S. பன்னீர் செல்வம் அவர்களுக்கு கர்த்தர் கொடுத்த தரிசனத்தின்படி அவரால் 1978–ஆம் ஆண்டு “இந்திய வேதாகம மொழிபெயர்ப்பாளர்கள்” என்ற பெயரில் ஆரம்பிக்கப்பட்ட ஊழியத்தின் மூலமாக இதுவரை 2 மொழிகளில் வேதாகமம், 16 மொழிகளில் புதிய ஏற்பாடு (லம்பானி மொழியில் 11.4.2026 அன்று புதிய ஏற்பாடு வெளியிடப்பட்டது), 8 மொழிகளில் சங்கீதம், நீதிமொழிகள், 37 மொழிகளில் 69 நற்செய்தி நூல்கள் வெளியிடப்பட்டு, அந்தந்த மொழிபேசும் மக்கள் பயன்பெற்றுள்ளனர்.

வாசிக்க இயலாதவர்களுக்காக படுகா மற்றும் தோடா மொழிகளில் புதிய ஏற்பாடு, சங்கீதம், நீதிமொழிகள், இருளா வெள்ளியங்காடு மற்றும் தெஷியா மொழிகளில் புதிய ஏற்பாடும் ஒலிப்பதிவு செய்து வெளியிடப்பட்ட கருவிகள் (Audio Device) வெளியிடப்பட்டு அந்தந்த மொழி பேசும் மக்களுக்குக் கொடுக்கப்பட்டுள்ளது. மொழிபெயர்ப்புப் பணியோடு இலக்கியப் பணி, மிஷனெரிப் பணி மற்றும் சமூகப் பணிகளும் நிறுவனத் தலைவர் மூலமாக ஆரம்பிக்கப்பட்டு தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு, பலருக்கு பயனளித்து வருவதற்காக கர்த்தரைத் துதிப்போம். அவருடைய 38 ஆண்டுகால ஓய்வில்லா உழைப்பினால் பயன்பெற்று வருவோர் அநேகர். இதற்காகக் கர்த்தரைப் போற்றுவோமாக!

# பணித்தளச் செய்திகள்

**மிஷனெரி : சகோ. சந்திரிகா தாஸ்**
**மொழி : பிந்த்ரா (உத்திரப்பிரதேசம்)**

இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் வாழ்த்துக்கள்!

மிஷனெரிப் பணிக்காக கடந்த மாதம் சுரவி பஜார், ஜட்வதாரா, மாச்சிரோ, பெல்நாத்பூர், ஜலால்பூர், குசமூரா, கரிக்கியா, தனேரம்பூர், லோரா ஆகிய கிராமங்களுக்குச் சென்று, நற்செய்தியை அறிவித்து, நற்செய்தி புத்தகங்கள் மற்றும் கைப்பிரதிகளை விநியோகித்து, அவர்களுக்காக ஜெபித்து வந்தேன். சகோ. சாந்லால், சிக்கந்தர், சகோதரிகள் சுபாவதி, மற்றும் பிரஜா ஆகியோர் நற்செய்தியை மிகுந்த ஆவலுடன் கேட்டறிந்தார்கள். சகோ. அஜயா, ரீணா, சிக்கந்தர், பார்ச்சி மற்றும் குஞ்சல்ராம் ஆகியோர் ஞானஸ்நானம் எடுக்க வாஞ்சையாக இருக்கிறார்கள்.

வழக்கம்போல் ஞாயிறு ஆராதனை, வீட்டு ஜெபக்கூட்டம், உபவாச ஜெபக்கூட்டம் நடத்தப்படுகிறது. என் மிஷனெரிப் பணிக்காகவும், என் குடும்பத்திற்காகவும் ஜெபித்துக் கொள்ளுங்கள்.

---

**முன்னேற்றப் பணியாளர் : சகோ. ராமலிங்கம்**
**பணித்தளம் : கோத்தகிரி (நீலகிரி, தமிழ்நாடு)**

உலகத்திலுள்ள அனைவர் பேசும் ஒவ்வொருவரின் தனித்தனி பேச்சுக்களுக்கு குரல் கொடுத்து வருகின்ற சத்திய வார்த்தையாகிய இயேசு கிறிஸ்துவின் இனிமையான நாமத்திற்கு ஸ்தோத்திரம் உண்டாவதாக! ஒவ்வொரு பாஷைக்காரர்களும் தனி உரிமையைப் பெரும்படிக்கு தரிசனம் கண்டு செயல்படுத்தி வரும் நமது IBT ஊழியம் மென்மேலும் செழித்தோங்கி வளர்வதாக!

கடந்த மாதம் முன்னேற்றப் பணிக்காக உதகை, குன்னூர், கோத்தகிரியிலுள்ள பட்டணங்களிலும், அதற்குள் அடங்கிய சிறு மற்றும் பெரிய கிராமங்கள் அனைத்திற்கும் நடந்தே சென்று, முன்னேற்றப் பணியை செய்து வந்தோம். அனைத்து ஊர்களின் பெயர்களையும் எழுத வேண்டுமென்றால் இடம் போதாது. மார்ச் மாதம் 5-ஆம் தேதியன்று, MUT ஊழியம் மூலமாக கோவை பெத்தேல் மருத்துவமனையில், ஏற்பாடு செய்யப்பட்டிருந்த மருத்துவப் பரிசோதனை மற்றும் மருத்துவ ஆலோசனையில், நானும் என் மனைவியும் மற்றும் ஊட்டி, கோவை, திருச்சியில் பணிபுரியும் IBT ஊழியர்களும் கலந்து கொண்டு பயன் பெற்றோம். விபத்தில் எனக்கு சிகிச்சையளித்த மருத்துவர் ராஜ பாண்டியன் என்னைப் பரிசோதனை செய்து எவ்வித பிரச்சனையும் இல்லை என்று வாழ்த்திக் கூறினார்.

இதே மாதம் 15-ஆம் தேதியன்று ஊட்டியிலுள்ள OBC சபை ஞாயிறு ஆராதனையில் IBT ஊழியத்திற்கு தேவசெய்தி கொடுக்கவும், ஊழிய விளக்கம் கொடுக்கவும் சந்தர்ப்பம் கிடைத்ததற்கு தேவனுக்கு நன்றி செலுத்துகிறேன். 18-ஆம் தேதி அகலார் (தூனேரி) பகுதியில் ஒரு அழைப்பின்பேரில் உபவாச ஜெபக்கூட்டத்தில் சத்திய வார்த்தைகளைக் கூறி ஜெபிக்க சந்தர்ப்பம் கிடைத்தது. இந்நாளில் 11 இலக்கியப் புத்தகங்கள் விற்பனை செய்யப்பட்டன.

எங்கள் இருவரின் அனுதின ஊழியப் பயணங்களுக்காகவும், எங்கள் சுகத்திற்காகவும் ஜெபித்துக் கொள்ளுங்கள்.

--------------------

**மொழிபெயர்ப்பாளர் : சகோ. சாமுவேல் சந்தா**
**மொழி : குவி**
**பணித்தளம் : அப்பர்காண்டி (ஒடிஷா)**

கர்த்தருக்கே துதி உண்டாவதாக!

கடந்த மாதம் மொழிபெயர்ப்புப் பணியில் புதிய ஏற்பாடு பாகத்தில் ஒருமித்த வாக்கிய சரிபார்ப்புப் பணி, மத்தேயு, மாற்கு மற்றும் அப்போஸ்தலரின் நடபடிகள் புத்தகத்தில் ஒரு அதிகாரம் செய்யப்பட்டது. புதிய ஏற்பாடு அனைத்துப் புத்தகங்களும் முடிந்தவுடன் சங்கீதம், நீதிமொழிகள் புத்தகங்களில் சரிபார்ப்பு செய்யப்பட வேண்டும்.

மிஷனெரிப் பணிக்காக ஏந்திர நகர், கெஜாரகுடா ஆகிய கிராமங்களுக்குச் சென்று, நற்செய்தியை அறிவித்து, ஜெபித்து வந்தேன். சகோ. சுரேஷ் மற்றும் சகோ. டேனியல் இருவரிடமும் இயேசு கிறிஸ்துவின் அன்பைக் குறித்துக் கூறினேன். மிக வாஞ்சையுடன் கேட்டார்கள். இவர்களின் குடும்பத்திற்காக, தேவைகளுக்காக ஜெபித்தேன். மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சைப் பெற்றுவரும் சகோ.கோபாவின் மகன் சுகம் பெற ஜெபித்தேன். என் மொழிபெயர்ப்புப் பணியில் புதிய ஏற்பாடு, சங்கீதம், நீதிமொழிகள் இணைத்து விரைந்து அச்சிடும்படியாக பணிகள் முடிக்கப்படவும், என் குடும்பத்திற்காகவும் ஜெபித்துக் கொள்ளுங்கள்.

--------------------

**மொழிபெயர்ப்பாளர் / மிஷனெரி :**
**சகோ. கேசப் மிர்கான்**
**மொழி : மிர்கான்**
**பணித்தளம் : கோண்டா பொர்ஜா (ஒடிஷா)**

கடந்த மாதத்தில் என் பணிகளை தொய்வில்லாமல் செய்திட உதவி புரிந்த கர்த்தருக்கு நன்றிகளை ஏறெடுக்கிறேன். மொழிபெயர்ப்புப் பணியில் பழைய ஏற்பாடு பாகத்தில் ஒப்பீடு குறிப்பு இணைப்புப் பணிகள் ("Cross reference inserting") லேவியராகமம் புத்தகம் அதி. 1 முதல் அதி. 27 வரையிலும், எண்ணாகமம் அதி. 1 முதல் 36 வரையிலும், உபாகமம் புத்தகம் அதி. 1 முதல் அதி. 34 வரையிலும் யோசுவா புத்தகம் அதி. 1 முதல் அதி. 24 வரையிலும் பாராடெக்ஸ்ட்-இல் செய்யப்பட்டன.

மிஷனெரிப் பணியில் மார்ச் மாதம் 21-ஆம் தேதியன்று கோண்டாபுரி பணித்தளத்திலும், மார்ச் மாதம் 31-ஆம் தேதியன்று கோண்டாபுரி பணித்தளத்திலும், மார்ச் மாதம் 31-ஆம் தேதியன்று கோட்டகன் என்ற கிராமத்தில் சுகவீனமுற்றோருக்கான ஜெபக் கூட்டம் நடத்தப்பட்டன. சுகம் அடைந்தவர்களில் திரு. மோனோ மிர்தரும் ஒருவர். மிஷனெரிகளின் பிள்ளைகள் அடுத்த வகுப்பிற்கு செல்கிறார்கள். அவர்களின் படிப்பிற்காகவும், என் மொழிபெயர்ப்புப் பணி, என் பிள்ளைகளின் சுகத்திற்காகவும் ஜெபித்துக் கொள்ளுங்கள்.

மிஷனெரி : சகோதரி. சுபிதா
பணித்தளம் : பாப்பன்பள்ளி (ஒடிஷா)

கர்த்தருக்கு ஸ்தோத்திரம்!

இரட்சகராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் வாழ்த்துக்கள். மார்ச் மாதம் முழுவதும் சிறுவர் இல்லத்தில் நடைபெற்ற அனைத்து ஊழியங்களுக்குள் தேவகிருபை இருந்து வந்தது. நமது சிறுவர் இல்ல மாணவர்களுக்கு இந்த ஆண்டு இறுதித் தேர்வு நடைபெற்றது. பிள்ளைகளை தினமும் படிக்க வைத்தோம். காலை, மாலை ஜெபம் நடத்தி பிள்ளைகளுக்கு தேவ அன்பை போதித்து வருகிறோம். 10 மற்றும் 12-ஆம் வகுப்பு மாணவர்களுக்கும் தேர்வு முடிந்தது. சில நாட்கள் பிள்ளைகளுக்கு காலை (6.00 - 11.30) மணி வரை வகுப்புகள் நடைபெற்றன. பிள்ளைகள் மூலம் வளாகத்தை சுத்தம் செய்ய வைத்தோம். உற்சாகமாக பிள்ளைகள் தோட்ட வேலை செய்து நீர் பாய்ச்சினார்கள்.

2026-2027-ஆம் கல்வியாண்டிற்கான மாணவர் சேர்க்கை ஏப்ரல் மாதத்தில் நடைபெறும். இந்த கல்வியாண்டில் நமது சிறுவர் இல்லத்திலிருந்து வெளியே போகும் பிள்ளைகளுக்காகவும், புதிதாக வரும் பிள்ளைகளுக்காகவும் ஜெபியுங்கள். நமது சிறுவர் இல்ல ஊழியங்கள் மற்றும் ஊழியர்களின் குடும்பங்களுக்காகவும், சிறுவர் இல்ல பிள்ளைகளின் இரட்சிப்பிற்காகவும் ஜெபியுங்கள்.

---

# "200 மொழிகளில்..." திட்டம்

## தேவனுக்கென்று எடுக்கப்படும் ஒரு தீரமானத் திட்டம்!
## இந்தியாவை சுவிசேஷமயமாக்கும் திட்டத்தில் ஒரு புதிய கட்டம்!!

"200 மொழிகளில்..." திட்டம் என்றால் என்ன?

இந்தியாவில் மொத்தம் 1652 மொழிகள் பேசப்படுகின்றன. ஒரு குட்டி பாபேல்! இவைகளில் 5000 ஜனத்தொகையைக் கொண்டதும், வேதாகமமொழிபெயர்ப்பு மிகவும் அவசரமாய், அவசியமாய் இருப்பதுமான மொழிகளின் எண்ணிக்கை 200. இந்த 200 மொழிகளிலும் வேதாகமத்தை மொழிபெயர்க்கும் திட்டம் தான் "200 மொழிகளில் திட்டம்".

"200 மொழிகளில்..." திட்டம் ஏன்?

"ஏனய்யா! உம்முடைய ஆண்டவர் பெரிய ஆண்டவராயிருந்தால், ஏன் என்னுடைய பாஷையிலே அவர் பேசமாட்டாரா?" என்று கேட்கும் பழங்குடியினரின் கூக்குரலின் எதிரொலிதான் "200 மொழிகளில்..." திட்டம்.

ஆம்! இன்று இயேசு ஒரு பழங்குடியினர் இல்லத்திற்குள் நுழைந்தால், அவர்களுடைய தாய்மொழியில் தானே தன்னுடைய கல்வாரியின் அன்பைக் கூறுவார். நாமும் இயேசுவின் வழியைப் பின்பற்றுவோம்!

உங்கள் பங்கு!

200 மொழிகளில் வேதாகமம் உடனடியாக மொழிபெயர்க்கப்பட வேண்டும்!

இன்னும் பல கோடி இந்தியர்கள் தேவனுடைய வார்த்தைக்காக ஆவலோடு காத்திருக்கிறார்கள்!

தாய்மொழி வேதாகமம், உங்களுக்கு மட்டும் தான் உரிமையா?

சிந்திப்பீர்! செயல்படுவீர்!! இன்றே... இப்பொழுதே!!!

இந்திய திருச்சபை சரித்திரத்தின் கடைசி அத்தியாயத்தை எழுதும் இந்த ''200 வேதாகமமொழிபெயர்ப்பாளர்களில்" ஒருவராக சேர முன்வாருங்கள்!

''200 மொழிகளில்....'' திட்டத்தில் இணைந்து, ஜெபத்தினாலும், பொருளுதவியினாலும் தாங்க தயங்காதீர்கள்!

ஓரத்தில் உட்கார்ந்து வேடிக்கை பார்த்தது போதும்! களத்தில் இறங்கி கடமையை நிறைவேற்றுங்கள்!

**அனைத்து மொழியிலும் மொழிபெயர்ப்போம்! அனைவரது உரிமையையும் பாதுகாப்போம்!!**

# நீங்கள் ஒரு வெற்றியாளரா? தோல்வியாளரா? நீங்களே தெரிந்து கொள்ளுங்கள்

உங்கள் தனிப்பட்ட வாழ்க்கையிலோ அல்லது நீங்கள் வேலை செய்யும் பணித்தளத்திலோ, ஒரு பெரிய பிரச்சினை திடீரென்று உருவாகிவிட்டது என்று வைத்துக் கொள்ளுங்கள்.

நீங்கள் வேலை பார்க்கும் தொழிற்சாலையில், அலுவலகத்தில் அல்லது, உங்கள் குடும்பத்தில் அல்லது, நீங்கள் வாழும் சமுதாயத்தில் ஒரு பிரச்சனை தலைதூக்கும்போது, நீங்கள் என்ன சொல்லுகிறீர்கள்? என்ன அணுகுமுறையை கடைபிடிக்கிறீர்கள் என்பது கீழே கொடுக்கப்பட்டிருக்கிறது. கவனமாக வாசித்து – இந்த இரண்டு குழுக்களில் நீங்கள் எந்த குழுவைச் சேர்ந்தவர் என்பதை நீங்களே தீர்மானியுங்கள். நீங்கள் எந்த அணுகுமுறையை கையாடுகிறீர்கள் என்பது தான் நீங்கள் ஒரு வெற்றியாளரா? தோல்வியாளரா? என்பதை தீர்மானிக்கிறது.

1. பிரச்சனை என்ன என்பதை எப்படியாவது நான் கண்டுபிடிப்பேன் – வெற்றியாளர்.

என்ன பிரச்சனை என்பது கடவுளுக்குக் கூட தெரியாது – தோல்வியாளர் பதில்.

2. தான் ஒரு தவறு இழைத்துவிட்டால், “ஆம், இது என்னுடைய தவறு'' என்று தனது தவறை தைரியமாக ஒத்துக் கொள்பவர் வெற்றியாளர்.

ஆனால் “இது என்னுடைய தவறு அல்ல என்று கழுவிய மீனில் நழுவுகிறவர்” தோல்வியாளர்.

3. வெற்றி பெறுபவர் – பிரச்சனையின் ஊடாக கடந்து போவார்.

தோல்வியாளர் அந்த பிரச்சனையிலிருந்து நழுவிக் கொண்டு வேறு குறுக்கு வழியைத் தேடுவார்.

4. வெற்றியாளர் – ''நான் இதைப் பொறுப்பெடுக்கிறேன்”, “நான் இதைச் செய்வேன், இதற்கு நான் பொறுப்பு” என்று கூறுவார். ஆனால் தோல்வியாளர், ''இதை செய்ய முயற்சிப்பேன், முடிந்த அளவிற்கு செய்வேன்” என்று கூறி நழுவப் பார்ப்பார். இவர்களை ''நழுப்பினி'' என்று அழைக்கலாம்.

5. வெற்றியாளர் – நான் தற்சமயம் செய்யும் வேலை எனக்கு திருப்திதான். ஆனால் இதே வேலையை இன்னும் திறமையாக செய்ய என்ன வழிமுறை என்பதை ஆராய வேண்டும் என்று சொல்லுவார்.

தோல்வியாளர்களோ, “நான் ஒன்றும் அந்த ஆளைப் போல (ஆயக்காரன் போல) அவ்வளவு மோசமானவன் அல்ல'' என்று தன்னை மற்றவர்களோடு ஒப்பிட்டு ஒப்பாரி வைப்பார்கள்.

6. வெற்றியாளர்கள் மற்றவர்களிடத்தில் உள்ள நல்ல காரியங்களை கற்றுக் கொள்ள முயலுவார்கள். ஆனால் தோல்வியாளர்களோ மற்றவர்களிடத்தில் என்ன குறைகளோ அதையே பட்டியல் போட்டு படம் போட்டுக் காண்பிப்பதிலேயே குறியாக இருப்பார்கள்.

7. வெற்றியாளர்கள் இந்த முறையைக் காட்டிலும் வேறு ஏதாவது Better Method – சிறப்பான முறை இருக்கிறதா – என்று ஆராய்ந்து வாழ்க்கையில் முன்னேற முயற்சிப்பார்கள். ஆனால் அதற்கு மாறாக தோல்வியாளர்கள் எல்லோரும் இதைத்தான் செய்கிறார்கள் – என்று பல்லவி பாடுவார்கள்.

நீங்கள் ஒரு வெற்றியாளரா? தோல்வியாளரா? உங்கள் வாழ்க்கையில் நீங்கள் கடைப்பிடிக்கும் கண்ணோட்டத்தை, அணுகுமுறையை தயவு செய்து மாற்றுங்கள், அல்லது மறுபரிசீலனை செய்யுங்கள். நல்லதையே யோசியுங்கள்; நல்லதையே செய்யுங்கள். அதையே எதிர்மறையாக யோசிக்காதீர்கள். எல்லாவற்றிலும் நல்லதே நடக்கும் என்று Positve ஆக யோசியுங்கள். நீங்களும் ஒரு வெற்றியாளராக நிச்சயமாக மாறுவீர்கள்.

***Road to success is always under Construction.***
***Things do not happen; you have to make things happen***
***Successful people don't do different things but they do the things differently.***

– “உயிருள்ள உதாரணங்கள்” என்ற புத்தகத்திலிருந்து பிரித்தெடுக்கப்பட்டது.

# எமது தரிசனமும், எமது பணியும்

<u>எமது தரிசனம் :</u> "இதுவரை மொழி பெயர்க்கப்படாத அனைத்து இந்திய மொழிகளிலும் வேதாகமம் மொழி பெயர்க்கப்பட்டு ஒவ்வொரு சமூகமும் தங்களது தாய்மொழியில் கடவுளுடைய வார்த்தைகளை கிடைக்கும்படி செய்வதே"

<u>எமது பணி :</u> கடவுளுடைய வார்த்தையை, இதுவரை வேதாகமம் இல்லாத அனைத்து இந்திய மொழிகளில் மொழிபெயர்த்து, அச்சிட்டு, போதிப்பது. மொழிவாரியாக இந்தியாவின் அனைத்துப் பகுதிகளுக்கும் வேதாகம மொழிபெயர்ப்பாளர்கள் / மிஷனெரிகளை அனுப்புதல் மற்றும் ஒவ்வொரு மொழிக்கும் "ஒரு வேதாகம மொழிபெயர்ப்பாளர் குழுவை" அமைத்து அனுப்புதல்.

# தேவை

சென்னையிலே பணிபுரியும் முன்னேற்றப் பணியாளருக்கு 1 இருசக்கர வாகனம் தேவைப்படுகிறது. தற்போதுள்ள பழைய வாகனத்தின் செலவு அதிகமாக வருவதால் புதிய வாகனம் கொடுக்க வேண்டியுள்ளது. இதற்கு ஆகும் செலவு ரூ. 1,10,000/-. இதற்கு தாங்குநர்கள் கிடைக்க ஜெபியுங்கள்.

Indian Bible Translators ஊழியங்களை காணிக்கைகளால் தாங்க விரும்புவோர் கீழே குறிப்பிட்டுள்ள வங்கிகளின் மூலமாகவும், கீழேயுள்ள **QR Code-ஐ Scan** *செய்து கைபேசி மூலமாகவும்* உங்கள் காணிக்கையை எங்களுக்கு அனுப்பலாம்.

**1. <u>STATE BANK OF INDIA</u>**

| | | |
|---|---|---|
| A/c. No. | : | 30008395600 |
| Name | : | Indian Bible Translators |
| Branch Code | : | 7231 |
| Branch | : | Peelamedu |
| IFS Code | : | SBIN0007231 |

**2. <u>INDIAN BANK</u>**

| | | |
|---|---|---|
| A/c. No. | : | 475742259 |
| Name | : | Indian Bible Translators |
| Branch Code | : | S107 |
| Branch | : | Peelamedu |
| IFS Code | : | IDIB000S107 |

**SCAN & PAY**

**Merchant Name : Indian Bible Translators**
**UPI ID : INDIANBIBLE@SBI**

BHIM UPI

(அனுப்பப்பட்ட விபரத்தை IBT அலுவலகத்திற்கு உடனடியாகத் தெரிவிக்கும்படி கேட்டுக் கொள்கிறோம். செல் : 90470 57414 இது உங்களுக்கு ஒப்புதல் ரசீது அனுப்ப உதவியாக இருக்கும்)

# கீழே கொடுக்கப்பட்டுள்ள புத்தகங்கள் விற்பனைக்கு உண்டு. வாசித்துப் பயனடையுங்கள்..!

| | | |
|---|---|---|
| 1. | வானத்தின் வாசல் | ரூ. 70/- |
| 2. | வானத்தின் மன்னா | ரூ. 70/- |
| 3. | பயப்படாதிருங்கள் | ரூ. 70/- |
| 4. | வேதாகமப் புத்தகங்களுக்கு ஓர் அறிமுகம் | ரூ. 60/- |
| 5. | உயிருள்ள உதாரணங்கள் | ரூ. 60/- |
| 6. | பாருக்குள் பரலோகம் | ரூ. 100/- |
| 7. | விவிலியப் பயணத்தின் விடிவெள்ளி | ரூ. 100/- |
| 8. | தேவ சத்தம் | ரூ. 100/- |
| 9. | Word of Life (ஆங்கிலம்) | ரூ. 100/- |
| 10. | Word of Life (மலையாளம்) | ரூ. 100/- |
| 11. | Introduction to the Books of the Bible | ரூ. 70/- |
| 12. | Defeat the Despair (ஆங்கிலம்) | ரூ. 100/- |
| 13. | Seeds for the Good Soil (ஆங்கிலம்) | ரூ. 120/- |
| 14. | சத்திய வார்த்தையின் முத்துக்கள் | ரூ. 120/- |
| 15. | இதய கீதங்கள் (பாடல் புத்தகம்) | ரூ. 60/- |

IBT வெளியிட்டுள்ள புத்தகங்களை தபால் மூலம் பெற விரும்புவோர் எங்களுடன் தொடர்பு கொள்ளுங்கள் - செல் : 90470 57414. நேரிடையாக, எங்கள் முன்னேற்றப் பணியாளர்கள் மற்றும் பிரதிநிதிகள் மூலமாகவும் பெற்றுக் கொள்ளலாம். இப்புத்தகங்கள் ஆவிக்குரிய வாழ்விற்கும், சமுதாய வாழ்வின் வெற்றிக்கும் மிகவும் பயனளிக்கக் கூடிய வகையில் Rev. Prof. S. பன்னீர் செல்வம் அவர்களால் எழுதப்பட்டவைகளாகும். ஆகவே, வாங்கிப் படித்துப் பயன்பெறுங்கள்!

# துதியுங்கள்! ஜெபியுங்கள்!!

1. திட்டமிட்டபடியே 11.4.2026 அன்று கோவை IBT மையத்தில் லம்பானி மொழியிலுள்ள புதிய ஏற்பாடு பிரதிஷ்டை செய்து வெளியிடப்பட்டதற்காகவும், கர்நாடகாவிலிருந்து மொழிபெயர்ப்பாளர் சகோ. பரமேஷ் அவர் மனைவி, மகள் மற்றும் லம்பானி மொழி பாஸ்டர் ஆகியோர் அவர்கள் கலாச்சார உடைகளை அணிந்து வந்து கலந்து கொண்டதற்காகவும் கர்த்தரைத் துதிப்போம். லம்பானி புதிய ஏற்பாடு புத்தகங்கள் அம்மொழி பேசும் மக்களுக்கு துரிதமாக விநியோகிக்கப்படவும், தடைகள் வராமல் இருக்கவும் ஜெபியுங்கள்.

2. கடந்த ஏப்ரல் மாதம் 11–ஆம் தேதியன்று கோவை IBT மையத்தில் முன்னேற்றப் பணியாளர் கூட்டமும், 12–ஆம் தேதியன்று IBT General Council கூட்டமும் நடைபெற்றதற்காக கர்த்தரைத் துதியுங்கள். இந்நாட்களில் எடுக்கப்பட்ட தீர்மானங்கள் பூரணமாய் நிறைவேற்றப்பட ஜெபியுங்கள்.

3. ஒவ்வொரு வருடமும் IBT ஊழியத்திற்கு சந்தர்ப்பம் கொடுப்பதுபோல இவ்வருடமும் போத்தனூரிலுள்ள CSI யூனியன் சபையில் ஏப்ரல் மாதம் 26–ஆம் தேதியன்று தேவ செய்தியளிக்கவும், ஊழிய விளக்கம் கொடுக்கவும் சந்தர்ப்பம் கொடுக்கப்பட்டதற்காக கர்த்தரைத் துதியுங்கள். இதைப்போலவே அதிகமான சபைகளில் சந்தர்ப்பம் கிடைக்கவும், அதன் மூலமாக ஊழியம் விரிவாக்கம் பெறவும் ஜெபியுங்கள்.

4. படுகா மொழியில் வெளியிடப்பட்ட புனித வேதாகமம் மீண்டும் அச்சிடும்படும்படியாக அதில் தவறுகள் கண்டறிந்து, பிழைகள் ஏதுமின்றி இரண்டாவது பதிப்பு தாமதமின்றி நடைபெற ஜெபியுங்கள்.

5. இருளா குஞ்சப்பனை மொழியிலும் புதிய ஏற்பாடு, சங்கீதம், நீதிமொழிகள் ஆடியோ கருவிகள் வெளியிடும்படியாக சங்கீதம், நீதிமொழிகள் சரிபார்ப்புப் பணி துரிதமாக முடிக்கப்பட ஜெபியுங்கள்.


**SEND ALL YOUR CONTRIBUTIONS**

**Cheques / DD / M.O. to**

**INDIAN BIBLE TRANSLATORS**

Civil Aerodrome Road, Coimbatore - 641 014.
Phone : 0422 - 3527370
WhatsApp & Mobile : 90470 57414
E-mail : indianbibletranslators@gmail.com
**Web : www.ibtword.com**


## சத்திய வார்த்தை

'சத்திய வார்த்தை' பத்திரிகைக்கு உங்கள் சந்தாவைப் புதுப்பித்துக் கொள்ளும்படி கேட்டுக் கொள்கிறோம். வருட சந்தா ரூபாய். 100/–

*சந்தா அனுப்ப வேண்டிய முகவரி :*

**WORD PUBLISHERS TRUST**

Civil Aerodrome Road, Coimbatore - 641 014.


Editor & Published by On behalf of — **Mr. K. JAISINGH**
**WORD PUBLISHERS TRUST**
14, Ashok Layout,
Civil Aerodrome Road,
Coimbatore - 641 014.

Printed by — **Mr. C.K. VENKATESH**
Chandra Prabha Press
113-118, V.H. Road, CBE-1.


## வாசகர்களுக்கு ஓர் அறிவிப்பு

சத்திய வார்த்தை பத்திரிகையின் சந்தாவைப் புதுப்பிக்காதிருந்தால் ரூ. 100/–ஐ மணியார்டர் மூலமாகவோ அல்லது கீழே குறிப்பிட்டுள்ள வங்கி மூலமாகவும், கீழேயுள்ள **QR Code-ஐ SCAN** செய்து, கைப்பேசி மூலமாகவும் உங்கள் காணிக்கைகளை எங்களுக்கு அனுப்பலாம். அனுப்பப்பட்ட விவரத்தை உடனடியாகத் தெரிவிக்கும்படி கேட்டுக் கொள்கிறோம். இது உங்களுக்கு ஒப்புதல் ரசீது அனுப்ப உதவியாக இருக்கும்.

**தொடர்பு எண். 90470 57414.**

BANK DETAILS

**CENTRAL BANK OF INDIA**

| | | |
|---|---|---|
| A/c. No. | : | 1630413107 |
| Name | : | Word Publishers Trust |
| Branch | : | Kalapatti |
| IFS Code | : | CBIN0282057 |

**SCAN & PAY**

Address :

**WORD PUBLISHERS TRUST**
14, Ashok Layout,
Civil Aerodrome Road,
Coimbatore - 641 014.


**SATHTHIYA VAARTHAI - TAMIL**

Date of Publishing : 2nd & 3rd June 2026
Postal Regd. No. **CB/052/2024-26**
Licensed to Post without Prepayment No.
**TN/WR/CB/164/WPP/2024-2026 (Tamil)**

**RNI No. 82166**